# வானவில்

**VAANAVIL**

| | | | |
|---|---|---|---|
| இதழ் | 133 | தை | 2022 |
| ISSUE | 133 | JANUARY | 2022 |


# குதிரை ஓடிய பின்னர்
# *லாயத்தைப் பூட்டிப் பயனில்லை!*



“எதிர்கால சந்ததியினரை நோயற்றவர்களாக உருவாக்குவதற்கே செயற்கை இரசாயனங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதை நிறுத்தியுள்ளோம்”.
இவ்வாறு கூறுகிறார் நமது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச.

“ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான மரக்கறி வகைகளை தத்தமது வீட்டு வளவுகளிலேயே உற்பத்தி செய்யுங்கள்”.
இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பந்துல குணவர்த்தன.

“நாட்டில் விரைவில் மக்கள் பட்டினியால் செத்து மடிவர்”.
எதிர்க் கட்சிகள் இப்படிப் பிரச்சாரம் செய்கின்றன.

“டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்”.
இப்படிச் சொல்கிறார் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச.

“எதிர்க் கட்சிகள் சொல்வது பெரும் டொலர் பற்றாக்குறை எதுவும் நாட்டில் இல்லை”.
மத்திய வங்கி ஆளுநர் கருத்து.

“ஜனாதிபதி பிரயாணம் செய்த காரைப் பார்த்ததும், பால்மா வாங்க வரிசையில் நின்ற மக்கள் “கூ” போட்டுச் சத்தம்”.
இப்படித் தெரிவிக்கின்றன ஊடகங்கள்.

“இந்த அரசாங்கம் மிக விரைவில் வீட்டுக்குச் செல்ல வேண்டி வரும்”.
இப்படித் தெரிவிக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

“அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசை விமர்சித்ததால் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதியால் அதிரடியாகப் பதவியிலிருந்து நீக்கம்”.
ஊடகத் தலைப்புகள்.

“நிதியமைச்சர் பதவிக்கு அடுத்ததாக பிரதமர் பதவி மீது பசில் கண் வைத்துள்ளார்”.
இதுவும் ஊடகங்களின் ஆருடம்.

இவை யாவும் அண்மைய சில மாதங்களாக நமது காதுகளில் வந்து விழும் செய்திகள். இந்தச் செய்திகளில் எவ்வளவு தூரம் உண்மை பொய் இருக்கிறது என்பது ஒருபுறமிருக்க, நாடு இன்று சிக்கியுள்ள நெருக்கடி நிலையை இந்தச் செய்திகள் ஓரளவு பிரதிபலிக்கின்றன என்பதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

அதே நேரத்தில் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை ஓரளவு ஏற்றுக் கொள்ளும் அரச தரப்பினர், இந்த நெருக்கடிகளுக்கு காரணங்கள் எனச் சிலவற்றைச் சொல்கின்றனர்.

அதாவது, உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கொவிட் பெருந்தொற்றால் உலகப் பொருளாதாரமே சரிந்துள்ள நிலையில், இலங்கைக்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தந்த சுற்றுலாத்துறையும் ஏனைய தொழிற்துறைகளும் வீழ்ச்சி அடைந்ததால் ஏற்பட்ட பாதிப்பு இது என்பது ஒரு காரணம்.

இன்னொரு காரணம், முன்னைய ‘நல்லாட்சி’ அரசாங்கம் எவ்வித திட்டமும் இல்லாமல் வெளிநாடுகளில் கண்டபாட்டுக்கு கடன் வாங்கியதால் வந்த வினை என்ற வியாக்கியானம்.

மேலுமொரு காரணமாக, உலகில் உள்ள பெரும் பெரும் செல்வந்த நாடுகளே

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# நாங்கள் 12வது ஆண்டில் காலடி வைக்கின்றோம்!

ஆண்டுகள் பதினொன்று ஓடிவிட்டன. முதல் இதழ் வெளியிட்டபோது 2022 ஆண்டில் கால் பதிப்போம் என்பது எங்களுக்கே தெரியாது. தமிழில் நல்ல கருத்துக்களோடு சாதாரணமாக பத்திரிகை ஒன்றினை இலவசமாக வெளியிடுவதென்பது இலகுவான காரியமல்ல என்பதனையே, 133 இதழ்கள் வெளியிட்டதின் அனுபவங்கள் எங்களுக்கு உணர்த்தி நிற்கின்றன. இந்த மாபெரும் வெற்றிக்கு பின்னால் பலரது சலிக்காத உழைப்புகள் உள்ளன. எனினும் எங்களால் மாதமொன்றிற்கு 16 பக்கங்களுக்காக மாத்திரமேதான் உழைக்க முடிகின்றது.

ஊடகங்கள் பொதுவாக எல்லா வகையிலும் சமூகத்தை பாதிக்கின்றன. நீங்கள் எழுந்த நேரம் முதல் நீங்கள் படுக்கைக்குச் செல்லும் வரை, நீங்கள் ஊடகங்களாலேயே சூழப்பட்டிருக்கிறீர்கள். கோடிக்கணக்கான டொலர்கள் முதலீடுகள் கொண்ட ஊடகங்கள் செலுத்தும் தாக்கங்களின் மத்தியில், 'வானவில்' போன்ற முதலீடுகள் எதுவுமே இல்லாத பத்திரிகைகள் சாதிக்கப்போவது என்ன? இதற்கான பதில் வாசகர்களாகிய உங்களிடமே இருக்கின்றது. நமக்கு என்ன தேவை, அதனை எந்த ஊடகம் சரியாக கொடுக்கிறார்கள் என்பதை நேரம் செலவிட்டு தேடிக் கண்டடைவதென்பது ஒவ்வொரு வாசகனதும் கடமை.

---

இன்றைய அறிவியல் வளர்ச்சியில் மனிதனின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த பொருள் என்னவெனில் கணனி. இந்தக் கணனி உலகில் நொடிக்கு நொடி செய்திகள் வந்தவண்ணமுள்ளன. அதாவது ஊடகத்துறையும் கணனியும் பிரிக்கப்பட முடியாதவை. ஒவ்வொருவரது ஊரிலும் தினமும் பல சம்பவங்கள் நிகழ்கின்றன. அதைப்போலவே இலங்கையிலும் உலகிலும் பல ஆயிரம் சம்பவங்கள். இவைபற்றியெல்லாம் முன்னொரு காலத்தில் வானொலி அல்லது தொலைக்காட்சி வாயிலாகவே முதன்முறையாகக் கேட்போம். ஆனால் இன்றோ வானொலி, தொலைக்காட்சியில் கேட்பதற்கு முன்பாக கையடக்கக்கணனியில் பார்க்கலாம்.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பது போல, 22 ஆம் நூற்றாண்டில் மனிதர்களுடைய வாழ்வு வெகுவாக மாறியுள்ளது. மிகவிரைவான தகவல் தொழிநுட்ப சாதனங்கள் இதனை சாத்தியமாக்கியுள்ளன. உலகில் உள்ள மனிதர்களில் இந்த தொழில் நுட்பங்களை பாவிக்காமல் இருப்பவர்கள் விதிவிலக்கு என்று கூறுமளவிற்கு இதன் பாவனை அதிகரித்துள்ளது. உலகமெங்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனோடு இணைந்த சமூக வலைத்தளங்களினுடைய பாவனை மனிதனை அடிமைபடுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். Facebook, Youtube, Skype, Instagram, Messenger, Viber, Whatsapp, Twitter என பலவகையான வலைத்தளங்கள் உருவாகி மனித சமூகத்தை வேறொரு பரிணாமத்துக்கு கொண்டு சென்றிருக்கின்றது. இவை உலகளவில் கோடிக் கணக்கான பயனர்களை கொண்டவையாக இருக்கின்றன. உலகில் 62% மக்கள் தங்கள் செய்திகளை சமூக ஊடகங்கள் வாயிலாகவே பெறுகிறார்களென ஓர் ஆய்வு கூறுகின்றது

சமூக ஊடகங்களை பொறுத்த வரையில் பொறுப்புக்கூறல் என்னும் சமூகக் கடப்பாடு, கட்டுப்பாடு எதுவுமே கிடையாது. ஒரு தனிநபரையோ அல்லது ஒரு குழுவையோ வெறுப்பூட்டும் வகையில் சமூக ஊடகங்களால் இலகுவாகச் செய்திகளை பரப்ப முடிகின்றது. இதன் விளைவாகவே சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சில நேரம் வன்முறைகளை ஊக்குவிப்பதுடன் பல உயிர்களை காவு கொள்வதற்கும் வழிவகுக்கின்றன. கடந்த ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நாடாளுமன்றக் கட்டடத்தை, தனது ஆதரவாளர்களைக் கொண்டு தாக்குவதற்கு அவரது கட்டுப்பாட்டில் இருந்த முகநூல், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களையே அவர் பயன்படுத்தினார்.

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ சமூக ஊடங்கள் இன்று உலகையே உள்ளங்கைக்குள் சுருக்கி வைத்திருக்கின்றன என்பதுதான் உண்மை. கடந்த ஆண்டு ஜனவரியில் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கை ஒன்றின்படி, இலங்கையில் 7.9 மில்லியன் பேர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகத் தெரிய வருகின்றது. இலங்கையின் சனத்தொகை 22 மில்லியன். ஆனால் 30.41 மில்லியன் கைத்தொலைபேசி இணைப்புகள் இருப்பதாக அந்த அறிக்கை கூறுகின்றது. கைத்தொலைபேசிகள் பொழுதுபோக்குத் தளமாக மட்டும் இல்லாமல், பலநேரங்களில் சாமானிய மக்களுக்கு எளிதாக பயன்படும் கருவியாகவும் அவை மாறிவிடுவதுண்டு. இவை தூரமாய் இருக்கும் மனிதர்களையும் சமூகங்களையும் அருகாமையில் உணர வைக்கின்றது.

---

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கொரானா பெருந்தொற்று எங்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. இதுவரையில் எந்த தடுப்பூசியாலும் வைரசின் பரவலை தடுத்து நிறுத்த முடியவில்லை. எனவே இந்த வைரசிற்கு எதிராக நீச்சல் போடுவதற்கு நீண்டகாலம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். மக்கள் வீட்டில் முடங்கி கிடக்கும் இந்த இக்கட்டான காலப்பகுதியில், அவர்கள் சமூக ஊடகங்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கும் அவலமும் ஒருபுறம் நிகழ்ந்த வண்ணமுள்ளது. இவ்வாறு சமூக ஊடகங்களில் செலவிடும் நேரங்களைக் குறைத்து, சரியான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டுமென்ற ஒரேயொரு நோக்கத்தோடு வெளிவந்து கொண்டிருக்கும் 'வானவில்' பத்திரிகையைப் படித்து எம்மை ஆதரிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

***புத்தாண்டு வாழ்த்துகள்!***

*'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

# எனக்கு சந்தேகமில்லை அவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் இறந்து விடுவார்!

**-ஜூலியன் அசாஞ்சேயின் (Julian Assange) சகோதரர்**

பிரித்தானிய உயர் நீதிமன்றம் விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேயை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவது என்ற தீர்ப்பை வழங்கிய பின்னர் அவர் புதிதாக நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்நோக்கியுள்ளார். “அவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் அங்கு இறந்து விடுவார் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை” என அவரது சகோதரர் கப்பிரியேல் சிப்ரன் (Gabriel Shipton) சீனாவிலிருந்து வெளிவரும் ‘குளோபல் ரைம்ஸ்’ (Global Times) பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருக்கிறார். அந்தப் பேட்டியின் சாராம்சம் வருமாறு:

**குளோபல் ரைம்ஸ்:** நீங்கள் கடைசியாக அவரை எப்பொழுது பார்த்தீர்கள்? அவரது நிலைமை எப்படி இருக்கிறது?

**சிப்ரன்:** நான் கடைசியாக ஜூலியனை இலண்டனுக்குச் சற்றுத் தள்ளியிருந்த பெல்மார்ஸ் (Belmarsh) என்ற அதியுயர் பாதுகாப்புள்ள சிறைச்சாலையில் கண்டேன். அது நான் இலண்டனில் கடைசியாக இருந்த கடந்த வருடம் ஒக்ரோபர் மாதமாகும். அவருடைய உடல் நிலையைப் பொறுத்த வரையில் நான் நினைக்கிறேன் அப்பொழுதே அவர் அந்தச் சிறையில் இரண்டு வருடங்களைத் தாண்டி விட்டார் என்று. எனவே இதுவே அவரை எடுத்து விட்டிருக்கும். ஈகுவடோறியன் தூதரகத்துக்கோ அல்லது சிறைச்சாலைக்கோ பல வருடங்களாக அவரைப் பார்க்கப் போகும் போதோ அவரது பாதிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.
இந்த அழுத்தங்களின் கீழ் அவரது உடல்நிலை போய்விட்டது. கடந்த ஒக்ரோபரில் அவரது மேன்முறையீட்டின் போது அவருடைய உடலில் ஒரு சிறிய வலித் தாக்குதல் (Stroke) நடந்தது. அவரது உடல் நிலை மோசமடைந்து வருவதால் அவர் தொடர்ந்து உயிர் பிழைத்திருப்பாரோ என அஞ்சுகிறோம்.

**குளோபல் ரைம்ஸ்:** அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவது என்ற தீர்ப்பு இறுதியாக வந்த பொழுது அதை நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்? அந்தப் பயத்தினால் ஜூலியன்



**Gabriel Shipton**

தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானிக்கலாம் என நீங்கள் கருதவில்லையா?

**சிப்ரன்:** ஆம், இது சிலவேளை நடக்கலாம். அவர் பிழைத்திருப்பார் என நான் நம்புகிறேன். அவர் மிகவும் திடகாத்திரமானவரும் உறுதியானவரும். உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இந்த நாடு கடத்தல் அங்கீகாரத்துக்கு எதிராக நாம் போராடுவோம். ஜூலியன் மேன்முறையீடு செய்வார். அவர் பிரித்தானிய உச்ச நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்வதற்கு டிசம்பர் 24 வரை கால அவகாசம் இருக்கிறது. ஆனால், தொடர்ந்தும் பிரித்தானிய நீதிமன்றங்களை நாம் நம்பவில்லை. அவர் வெற்றி பெறுவதற்கு மிகவும் அரிய வாய்ப்பே உண்டு என்று நான் நினைக்கிறேன். டிசம்பர் 10 ஆம் திகதி அவரது நாடு கடத்தல் தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளில் ஒருவர் இங்கிலாந்தினதும் வேல்ஸ்சினதும் தலைமை நீதிபதி. முழு இங்கிலாந்தினதும் மிகவும் சிரேஸ்ட நீதிபதியின் தீர்ப்பு இந்த நாடு கடத்தலாகும்.

எனவே, உச்ச நீதிமன்றத்துக்கு செய்யும் மேன் முறையீட்டில் போது பிரித்தானியாவின் அது உயர்ந்த நீதிபதியின் தீர்ப்பை அவருக்கு எதிராக வழங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது. இது உண்மையில் அமெரிக்காவுக்கும் அதன் பைடன் நிர்வாகத்துக்குமாக பத்திரிகை சுதந்திரத்தின் மீதும், ஊடக சுதந்திரத்தின் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகும்.

**குளோபல் ரைம்ஸ்:** இந்த மேன் முறையீடு ஒரு புறமிருக்க, அதற்கப்பால் வேறு ஏதாவது செய்யும் திட்டம் உங்களுக்கு இருக்கிறதா?

**சிப்ரன்:** நாங்கள் இப்பொழுது ஜூலியனின் விடுதலைக்காக உலகளாவிய பிரச்சாரத்தைச் செய்து வருகிறோம். ஜூலியனின் விடுதலைக்காக நாங்கள் இன்று அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் இருக்கிறோம், நாளை வாசிங்டனில் இருப்போம். நான் இங்கு ஊடகங்களுடன் தொடர்பில் உள்ளேன். எமது பிரச்சாரங்கள் பல வழிகளில் போய்க் கொண்டிருக்கிறது. நான் இப்பொழுது நியுயோர்க்கில் உள்ள பிரித்தானிய உதவித் தூதராலயத்துக்கு முன்னால் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இருக்கிறேன். இதில் பல மக்களும், பிரமுகர்களும், ஏராளமான ஊடகங்களும் பங்கேற்றிருக்கின்றனர். ஜூலியன் மீதான தண்டனைக்கு எதிராகப் புதிதாக கவனம் கொள்ளப்பட்டுள்ளது. நாம் முன்னேறிச் செயல்பட்டு அவரின் விடுதலைக்கான இயக்கத்தை முன்னெடுப்போம்.

**குளோபல் ரைம்ஸ்:** ஜூலியன் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் என்ன நடக்கும்?

**சிப்ரன்:** அவர் இறப்பார் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. அவர் அமெரிக்க சிறைச்சாலை நிர்வாகத்துக்கு நாடு கடத்தப்பட்டால், அவர்கள் தமது கைதிகளைப் பாதுகாப்பதில்லை. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஜெ.ஃ.றி எப்ஸ்ரெயின் (Jeffrey Epstein) போன்ற மற்றைய கைதிகளுக்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் பார்க்கலாம். அவர்கள் அவரை மற்றைய சக்திகளிடமிருந்து பாதுகாப்பார்கள் என்று நாம் நம்பவில்லை.

வாசிங்டனில் இருந்து செப்ரெம்பரில் வெளியான சில ஆய்வறிக்கைகளைப் பார்க்கையில், ஈகுவடோறியன் (Ecuadorian) தூதராலயத்தில் அவர் இருந்த பொழுது அவரைக் கடத்தவோ அல்லது கொல்லவோ சி.ஐ.ஏ. சதித்திட்டங்கள் தீட்டியதாகத் தெரிய வருகிறது. அந்தச் சதித் திட்டங்கள் அற்றுப் போய்விடவில்லை என நான் நினைக்கிறேன். அந்தக்

குழுக்கள் ஜூலியனின் மரணத்தைக் காண்பதற்கு அமெரிக்க புலனாய்வுச் சேவைகளில் இன்னமும் இருக்கின்றன என நான் கருதுகிறேன். அதனால்தான் அவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் என்ன நடக்கும் என நான் அஞ்சுகிறேன்.

**குளோபல் ரைம்ஸ்:** நீங்கள் இது சம்பந்தமாக பைடன் நிர்வாத்தின் ஆதரவைத் திரட்டுவதற்கு ஆட்சிக்கு வந்த புதிதில் முயன்றுள்ளீர்கள். இதைச் செய்யும் போது உங்களுக்கு ஏதாவது ஏமாற்றங்கள் ஏற்பட்டனவா?

**சிப்ரன்:** ட்ரம்பிற்கு பின்னரான காலத்தில் அவர்களுக்கு சிந்தனை மாற்றம் ஏற்பட்டு பைடனுக்கு எடுத்துச் செல்ல கால அவகாசம் தேவைப்பட்டிருக்கலாம். ஜூலியன் இல்லாமல் அவரைத் தண்டிப்பதை மாற்றி ஒபாமாவின் நிலைக்குச் செல்ல சில வேளைகளில் முயன்றிருக்கலாம்.

இந்த நிலையை பைடன் நிர்வாகம் மாற்றியமைக்கலாம் என்ற சிறிய எதிர்பார்ப்பு இருந்தது. அந்த நிர்வாகத்துடன் எமக்கு ஆரம்பத்தில் சில தொடர்புள் இருந்தன. ஆனால் ஜனவரி 20 இல் பதவியேற்பு நிகழ்ந்த பின்னர் அதிகம் தொடர்புகள் இருக்கவில்லை. பின்னர் குறுகிய காலத்தில் இந்தத் தண்டனையை முன்னெடுக்கப் போவதாக அவர்கள் அறிவித்தனர்.

கடந்த வாரம் பைடன் நிர்வாகத்தின் "ஜனநாயக மாநாட்டை" பார்த்தோம். அதில் அவர்கள் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி பேசுபேசென்று பேசினார்கள். அவர்கள் ஒரு வெளியீட்டாளரும் ஊடகவியலாளருமான ஒருவரைச் சிறையில் வைத்துக் கொண்டு தங்களுடைய நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பிரசங்கம் செய்தனர். அமெரிக்க நீதித்துறை கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே ஜூலியன் சிறையில் இருப்பதுடன், அவருக்கு பிணை வழங்கக்கூடாது என்றும் அவர்கள் கோரியிருக்கிறார்கள்.

பைடன் நிர்வாகம் தாங்கள் எவ்வளவு தூரம் உண்மையில் பத்திரிகைச் சுதந்திரத்தில் அக்கறையாக இருக்கிறார்கள் என்பதை உலகிற்குக் காட்ட இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பேசுவதோ, மற்றைய நாடுகளுக்கு அது பற்றிப் பிரசங்கம் செய்வதோ முக்கியமானதல்ல, உண்மையில் அவர்கள் பத்திரிகைச் சுதந்திரத்தில் அக்கறையானவர்களாக இருந்தால் ஜூலியனை வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். இது தாங்கள் பத்திரிகைச் சுதந்திரத்தில் அக்கறையாக இருப்பதாகக் காட்டுவதற்கான வழிமுறையாகும். எனவே இது பற்றி அவர்கள் மற்றைய நாடுகளுக்குப் பிரசங்கம் செய்யத் தேவையில்லை.

பைடன் நிர்வாகம் பத்தரிகைச் சுதந்திரம் பற்றி மற்றையவர்களுக்கு பிரசங்கம் செய்ய விரும்பினால் அவர்கள் ஜூலியன் அசாஞ்சேயை விடுவிக்க வேண்டும் என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இன்று ரூவீட் செய்திருந்ததைப் பார்த்தேன். உலகம் முழுவதுமுள்ள நாடுகளும் அரசுகளும் அமெரிக்காவைப் பார்த்து 'நீங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை ஏனெனில், நீங்கள் ஜூலியன் அசாஞ்சேக்கு என்ன செய்கிறீர்கள்' என்பது தெரிகிறது எனக் கூறுகின்றன.

**குளோபல் ரைம்ஸ்:** ஆஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அவர்கள் வித்தியாசமாக இருக்கிறார்களா?

**சிப்ரன்:** அப்படித்தான் நினைக்கிறேன். ஆஸ்திரேலியா இப்பொழுது AUKUS ஒப்பந்தத்தில் இருக்கிறது. ஆஸ்திரேலியா அமெரிக்காவின் கூட்டாளி என்பதால், திரும்பி நின்று, 'ஹே, நாங்கள் உங்கள் கூட்டாளிகள்' எனக் கூறுகிறார்கள். இது ஒரு புறமிருக்க, எங்களது ஆள் தனது குடும்பத்துடன் வீட்டுக்கு வந்திருக்கிறார். நேற்று, ஆஸ்திரேலியாவின் பிரதிப் பிரதமர் பார்னபி ஜோசி (Barnaby Joyce) ஜூலியன் அசாஞ்சேயின் நாடு கடத்தலை முன்னெடுத்துச் செல்ல வேண்டாம் எனக் கூறியிருக்கிறார்.

இது சில வேளைகளில் ஆஸ்திரேலிய அரசாங்கம் சிலவற்றைச் செய்வதற்குத் தூண்டுவதாகவோ அல்லது குறைந்தபட்சம் பிரதிப் பிரதமர் ஜூலியன் பக்கம் நின்று பிரச்சினையைப் பார்ப்பதாகவோ இருக்கலாம். ஆனால், பிரச்சினை என்னவென்றால், அமெரிக்கச் சட்டம் எங்கும் பிரயோகிக்கக் கூடியது. அமெரிக்கச் சட்டம் எல்லைகளை மீறி கூட்டாளி நாடுகளிலும் பிரயோகிக்கக் கூடியது. இது ஒரு பெரிய பிரச்சினை.

நாங்கள் கனடாவில் மெங் வான்சௌ Meng Wanzhou வையும் பார்க்கிறோம். அவர் ஹூவாவெய்யின் சிஎஃஓ. (CFO of Huawei). அமெரிக்கா, கனடாவுடனான நாடு கடத்தும் ஒப்பந்தங்களைப் பயன்படுத்தி அவரைப் பிடித்து வைத்தது. இது காலத்துக் காலம் திரும்பவும் திரும்பவும் நடைபெறுவதை நாம் பார்க்கின்றோம். அமெரிக்கா அரசியல் ரீதியாகத் தன்னை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மீது இந்த அநீதியான நாடு கடத்தும் உடன்படிக்கைகளைப் பிரயோகிக்கின்றது.

நான் நினைக்கிறேன் ஆஸ்திரேலியா தனது பெரிய கூட்டாளியான அமெரிக்காவிடம் 'நாங்கள் ஜூலியன் விடுவிக்கப்படுவதை விரும்புகின்றோம்' எனச் சொல்ல வேண்டும். ஆஸ்திரேலியா இந்தக் கூட்டைப் பயன்படுத்தி அமெரிக்காவிடமிருந்து சாதகமான உத்தரவுகளைப் பெற வேண்டும். ஆஸ்திரேலியா அமெரிக்காவின் மூலோபாயக் கூட்டாளியாகையால் அதை மதித்து நல்லதொரு முடிவை நமது பிரசைகளுக்குக் கிடைப்பதை நாம் செவிமடுக்க வேண்டும்.

**குளோபல் ரைம்ஸ்:** மேற்கத்தைய அரசாங்கங்களின் கண்டும் காணாமல் இருக்கும் போக்கின் விளைவுதான் ஜூலியனின் வழக்கு என்றும், மேற்கின் நிராகரிப்பு உண்மைக்கு அது இடம் கொடுக்காது என்பதைக் காட்டுவதாகவும் சிலர் கருதுகிறார்கள். இது பற்றி என்ன நினைக்கறீர்கள்?

**சிப்ரன்:** ஜூலியன் மீதான தண்டனை என்பது, நீங்கள் ஒரு அரசாங்கத்தின் குற்றங்களை அம்பலப்படுத்தினால், நீங்கள் ஒரு சித்திரவதையை அம்பலப்படுத்தினால், அல்லது நீங்கள் ஒரு அரசாங்கத்தின் ஊழலை அம்பலப்படுத்தினால், நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள் என்பதைக் காட்டுகிறது. ஒரு உண்மையைச் சொன்னால் அது சட்ட விரோதம் என அமெரிக்க நீதித்துறை காட்ட முயற்சிக்கிறது.

ஒரு அரசாங்கம் அவ்வாறு செய்தால் இதுதானா ஜனநாயகம் என நீங்கள் எண்ணுவீர்கள் என நினைக்கிறேன். நான் ஜனநாயகத்தில் வாழ்ந்தால் அரசாங்கம் எனது பெயரில் என்ன செய்கிறது என்பது எனக்குத் தெரியாது. எனது வாக்கின் அர்த்தம் என்ன? இதைத்தான் ஒவ்வொரு நான்கு வருடத்துக்கொரு முறை நாம் அரங்கேற்றுகிறோம். வாக்களிப்பு பற்றி உண்மையில் எங்களுக்குத் தெரியாததால், என்னத்துக்காக எமது வாக்குகள் அளிக்கப்படுகின்றன அல்லது எமது வரிப்பணம் எங்கே

செல்கிறது என்பது தெரியாது. ஜூலியனின் தண்டனை நாம் இதயபூர்வமாக நம்பும் ஜனநாயகம் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேற்கில் தலைமுறை தலைமுறையாக நடைபெறும் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை தடுத்து நிறுத்தி திரும்ப நெறிப்படுத்த வேண்டும்.

**குளோபல் ரைம்ஸ்:** அதே நேரத்தில் ஜூலியனின் வழக்கு சம்பந்தமாக அமெரிக்காவின் சில ஊடகங்கள் வெளியிடும் செய்திகளில் அவரை விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக அமெரிக்க பிரதான ஊடகத்துறையின் பிரதிபலிப்பு என்ன என நீங்கள் நினைக்கிறீர்கள்?

**சிப்ரன்:** அர்கள் எப்பொழுதும் அதிகம் செய்கிறார்கள். அவர்கள் துணிவதற்கு அவர்களுக்கிருக்கும் உரிமைகள்தான் காரணம். எனவே, அவர்கள் முன்வந்து ஜூலியனின் பாதுகாப்பை நியாயப்படுத்துகிறார்கள். அவர்கள் தகவல்களைப் பெறுவதுடன், சிலர் இது சம்பந்தமாக அதிகமாக அறிக்கையிடுகிறார்கள். இங்குள்ள தாக்குதல் நிலையிலும் உண்மையை உண்மையில் அறியும் தேவையுடன் தமது தொழிலை எப்பொழுதும் அதிகமாகச் செய்கிறார்கள். ஊடகவியல் ஒரு குற்றம் என்றால் பின்னர் எவ்வாறு என் தொழிலைச் செய்வது? நாம் சொல்ல வேண்டியது என்னவென்றால், கடந்த 10 வருடங்களில் பிரதான ஊடகங்கள் மக்களின் ஆதரவை இழந்துள்ளன. எனவே, அவர்கள் தம்மைப் பற்றி வலுவான பார்வையைச் செலுத்த வேண்டும். அத்துடன், ஜனநாயக சமூகத்தில் அவர்களது செயல்பாடு என்ன?

**குளோபல் ரைம்ஸ்:** ஜூலியனை விடுதலை செய்வதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்? அவரது விருப்பம் என்ன?

**சிப்ரன்:** இந்த வருட கிறிஸ்மஸ் தினத்துக்கு அவர் விடுதலையாகி வந்தால் நல்லது என நினைக்கிறேன். அவர் வெளியே வந்தால் இந்தத் துன்பத்திலிருந்து தன்னை மீள் சுதாரித்துக் கொள்ளவும், புனருருவாக்கம் செய்யவும் சில காலம் அவருக்குத் தேவைப்படும்.

சில வேகைளில் அவர் தன் பிள்ளைகள் மற்றும் அவரது மனைவி ஆகியோர் கொண்ட குடும்பத்ினருடன் நேரத்தைச் செலவிட வேண்டி இருக்கும். அவர்கள் மீண்டும் குடும்பமாக ஒன்றிணைந்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப சில காலம் எடுக்கும். அதன் பின் அவர் தன் பிள்ளைகளை பூங்கா, ஒரு கோப்பி கடை போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லக்கூடும். அந்த நேரம் இது கொஞ்சம் இனிமையான கனவு என எண்ணுகிறேன்.

**குளோபல் ரைம்ஸ்:** அவரது இரண்டு பிள்ளைகளும் இப்பொழுது எப்படி இருக்கிறார்கள்?

**சிப்ரன்:** அவர்கள் புத்திசாலிகள். கப்பிரியேல் (Gabriel) மற்றும் மக்ஸ் (Max) - அவர்கள் பரவாயில்லை, ஆனால் அவர்கள் இன்னமும் இளமையானவர்களாகையால் என்ன நடக்கிறது னன்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களில் ஒருவருக்கு ஜூலியன் சிறையில் இருப்பது ஒருபோதும் தெரியாது. அவருக்கு தனது தந்தை வெளியிலோ அல்லது அது போன்ற நிலையிலோ வாழ்வது தெரியாது.

அவர்கள் மேலும் வளர்ந்த பின்னர் என்ன நடக்கிறது என்பதை அறிவதுடன், தங்களது தந்தையார் செய்தது பற்றிப் பெருமைப்படவும் கூடும் என நான் நினைக்கிறேன். அத்துடன், அவர்கள் நல்லதொரு விளக்கத்தையும் பெறுவார்கள். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதுவும் தெரியாது. இதுதான் அவர்களது வாழ்க்கை.

# சீனா கூட்டிய மேற்கு நாட்டுக் மார்க்சியக் கட்சிகளின் கூட்டம்!




On Dec. 15, the IDCPC held via video link the Meeting between the CPC and Marxist Political Parties from Europe, North America and Oceania.

'**ஜனநாயகம், நீதி, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்**' என்ற தலைப்பிலான இணைய வழி கூட்டமொன்றுக்கு ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஓசியானாவிலுள்ள மார்க்சியக் கட்சிகளை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச திணைக்களம் அழைத்ததின் மூலம் சோசலிச சீனாவின் நண்பர்களை அது கௌரவப்படுத்தியிருக்கிறது. மார்க்சிய அரசியல் கட்சிகளின் இந்த நிகழ்வு 2021 டிசம்பர் 15 ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய 20 இற்கும் மேலான மார்க்சிய அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் இந்த தொனிப் பொருள்களின் உள்கிடக்கையைப் பற்றிக் கருத்துப் பரிமாறியதுடன், மார்க்சிய தத்துவம் மற்றும் நடைமுறை என்பனவற்றிலுள்ள புதிய விடயங்கள் பற்றிய குறிப்புகளையும் பரிமாறினர்.

ஆரம்ப உரையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச திணைக்களத்தின் தலைவர் சோங் தாவோ (Song Tao) வழங்கினார். அவர், சீனக் மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் போது ஆதரவு வழங்கிய நோர்மன் பெதூன் போன்ற சர்வதேசியத்துவ தோழர்களை நினைவு கூர்ந்து தனது உரையை ஆரம்பித்தார். ஒரு பலமான தலைமைத்துவமும் வழிகாட்டுதலும் இல்லாமையால் பரீஸ் கம்யூன் (Paris Commune) தோல்வியடைந்தது. அவர் குறிப்பிடுகையில், புதிய சகாப்தத்துக்கு ஏற்ப சீன நிலைமைகளுக்கு உரிய மார்க்சியத்தை சோசலிசத்தின் மீது நடைமுறைப்படுத்துவதற்கான

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# யுகடனவி (Yugadanavi) ஒப்பந்தம் சம்பந்தமாக முரண்பட்டு நிற்கும் அமைச்சர்களின் நிலைப்பாட்டை டியு குணசேகர ஆதரிக்கிறார்!

**'த** ஐலன்ட்' பத்திரிகையின் சமிந்திரா பெர்டினண்டோவுக்கு (Shamindra Ferdinando) இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் டியு குணசேகர (D.E.W. Gunasekera) வழங்கிய செவ்வியின் சாராம்சம்:

West Coast Power (Pvt) Ltd என்ற நிறுவனத்துக்கு 40 வீதமான பங்குகளை வழங்கிச் செய்யப்பட்ட ஒப்பந்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்த முரண்பாடான அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரின் செய்கை சரியென முன்னாள் அமைச்சர் டியு குணசேகர கூறுகிறார். இந்த ஒப்பந்தம் 2021 செப்ரெம்பர் 17 ஆம் திகதி கொழும்பில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

குணசேகர கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடான 'அத்த' (Aththa) பத்திரிகையில் ஜனவரி 02 ஆம் திகதி எழுதிய ஒரு கட்டுரையில், சிறீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்க அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மூன்று அமைச்சர்களும் இந்த ஒப்பந்தம் சம்பந்தமான நீதிமன்ற வழக்கில் மனுதாரர்களாக இல்லை. பதிலுக்கு அவர்கள் இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக கொள்கை ரீதியிலான ஒரு நிலைப்பாட்டையே எடுத்துள்ளனர். இது அமைச்சரவை நடைமுறைகளுக்கு முரண்பாடான ஒன்றல்ல என வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை குணசேகரவுக்குப் பதிலாக டாக்டர் ஜீ.வீரசிங்க தற்பொழுது வகித்து வருகிறார். கட்சியின் நீண்டகால உறுப்பினரான மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த அவர், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகி முதல் தடவையாக நாடாளுமன்ற அரசியலிலும் பிரவேசித்துள்ளார். இந்த நிலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மூன்று அமைச்சர்களும் இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக எடுத்துள்ள நிலைப்பாட்டை ஆதரித்து நிற்கிறது.

இந்த ஒப்பந்தம் சரியான நெறிமுறைகளைப் பின்பற்றிச்



**டியு குணசேகர**

செய்யப்படாததால் மூன்று அமைச்சர்களும் அதை எதிர்ப்பது அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறும் செயல் ஆகாது என குணசேகர வாதிடுகிறார்.

உச்ச நீதிமன்றம் இது சம்பந்தமான வழக்கை ஜனவரி 10 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. தலைமை நீதிபதி ஜெயந்த ஜெயசூரிய (Jayantha Jayasuriya) தலைமையிலான ஐந்து பேர் கொண்ட நீதிபதிகள் குழு வழக்கை விசாரிக்கும்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் (SJB) பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துநெத்தி மற்றும் வசந்தா சமரசிங்க, கொழும்பு மாவட்ட பேராயர் மல்கம் கார்டினல் ரஞ்சித், வண.எல்லே குணவன்ச தேரர் மற்றும் Viduli Sevaka Sangamaya ஆகியோர் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் கருத்துக் கூறிய குணசேகர, மூன்று அமைச்சர்களும் இந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த சூழலில், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச அமைச்சரவையில் இந்த ஒப்பந்தம் குறித்து விவாதிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கியிருக்க வேண்டும். சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், இந்தப் பிரச்சினை ஒரு பெரும் அரசியல் நெருக்கடியாக மாறுவதை பொதுஜன பெரமுன அரசாங்கத்தால் தடுத்திருக்க முடியும். அரசாங்கத்தின் தோல்விகளுக்கு அது அமைச்சரவையின் ஒரு பகுதியினர் தெரிவித்த கருத்துகளை செவி மடுக்காததும் ஒரு காரணம். இது ஒரு முதல் தவறும், முதல் குற்றமும் ஆகும் எனத் தெரிவித்தார்.

நாட்டின் இறைமைக்கும் தேசிய அபிலாசைகளுக்கும் எதிரானதுமானதும், தற்போதைய பூகோள அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தி ஸ்திரத்தன்மையற்ற நிலையை ஏற்படுத்தக் கூடியதும், திறைசேரிக்கு சொந்தமானதுமான இந்த விடயத்தை சரியான நெறிமுறைகளைப் பின்பற்றாமலும், வெளிப்படைத் தன்மை அற்றும் எவ்வாறு 40 வீதமான பங்குளை இந்த ஒப்பந்தத்தின் மூலம் மற்றவர்களுக்கு வழங்க முடியும் என குணசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

குணசேகர மேலும் விபரிக்கையில், தற்போதைய நெருக்கடியைக் கையாள்வதில் பொதுஜன பெரமுன அரசாங்கம் தொடர்ந்து தோல்வியையே தழுவி வருகிறது. எதிர்மறைகள், சவால்கள் என்பவற்றை விளங்கிக் கொண்டு சரியான பொருளாதார யுக்தியை வகுத்துச் செயல்படுவதற்குப் பதிலாக, அரசாங்கத்திலுள்ள செல்வாக்கு மிகுந்த ஒரு பகுதியினர் தமது தோல்விகளுக்கு கொவிட் – 19 பெருந்தொற்று மீது பழியைப் போடுகின்றனர் எனக் கூறியதுடன், அரசாங்கம் ஒரு திருப்பு நிலையை எடுத்து புதிய மாற்று வழியைக் கண்டறியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

தற்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்பன இந்த யுகடநவி பிரச்சினையால் எழுந்துள்ள நெருக்கடி குறித்து சரியாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல் அற்றவையாக இருக்கின்றன. ஐ.ம.சக்தியும், ஐ.தே.கவும் தற்போதைய நெருகடிக்கு தவறான முகாமைத்துவம் காரணம் எனக் கருதுகின்றன. ஆனால் ஜே.வி.பியோ வீண் விரயம், ஊழல், பொது நிதியைத் தவறாகக் கையாண்டு

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# அன்னை தெரேசா தொண்டு நிறுவனம் வெளிநாட்டு நிதி பெற இந்திய அரசு தடை!



இந்தியாவில் பல தசாப்தங்களாகத் தங்கியிருந்து மதப் பணியுடன் ஏழை எளிய மக்களுக்கான தொண்டுப் பணியையும் ஆற்றி வந்தவர் "அன்னை தெரேசா" (Mother Teresa) என்று அழைக்கப்படும் மெசிடோனியாவைச் (Macedonia) சேர்ந்த கிறிஸ்தவ கன்னியாஸ்திரி. மேற்கு வங்க மாநிலத்தின் கொல்கத்தா நகரைத் தளமாகக் கொண்டு செயல்பட்ட அன்னை தெரேசா அந்த மண்ணிலேயே தனது இறுதி மூச்சையும் விட்டார்.

தெரேசா அம்மையார் தான் உயிரோடு இருந்த காலத்திலேயே தொண்டு நிறுவனம் ஒன்றையும் உருவாக்கியிருந்தார். அந்த நிறுவனம் "அன்னை தெரேசா தொண்டு நிறுவனம்" (Missionaries of Charity) என அழைக்கப்படுகிறது. இந்த தொண்டு நிறுவனத்தின் தொண்டர்கள் அநாதைப் பிள்ளைகளுக்கான தங்கு விடுதிகளை அமைத்து அவர்களைப் பராமரிப்பதுடன், பாடசாலைகள், மருத்துவ மனைகள் என்பனவற்றையும் நடத்தி வருகின்றனர்.

இந்த நிறுவனத்துக்கு வெளிநாடுகளிலிருந்து நன்கொடைகள் கிடைத்து வந்தன. இதுவரை காலமும் இருந்த இந்திய அரசாங்கங்கள் அதற்கு அனுமதி அளித்து வந்தன. நன்கொடை பெறுவதற்கான அனுமதிப் பத்திரம் அரசாங்கத்தால் வருடா வருடம் புதுப்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்தியாவின் தற்போதைய மோடி அரசாங்கம் 2022 ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்க முடியாது என கிறிஸ்துமஸ் தினத்தன்று அறிவித்துள்ளது. மோடியின் அடிப்படைவாத இந்துத்துவ சங் பரிவாரங்கள் கிறிஸ்துமஸ் தினத்தன்று நாடு பூராவும் உள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்களையும், யேசு நாதரின் சிலைகளையும் உடைத்து சேதப்படுத்தின பின்னணியில் இந்த அறிவிப்பும் வந்துள்ளது.

அன்னை தெரேசா தொண்டு நிறுவனம் வெளிநாட்டு நன்கொடைகளைப் பெறுவதற்கு தடை விதித்த காரணத்தை குறிப்பிட்ட இந்துத்துவவாதிகள், இந்த நிறுவனம் அந்த நிதியைப் பயன்படுத்தி இந்துக்களை கிறிஸ்தவர்களாக மதம் மாற்றி வருகிறது என்ற குற்றச்சாட்டை முன் வைத்திருக்கிறனர். ஆனால், அவர்களது குற்றச்சாட்டை குறிப்பிட்ட தொண்டு நிறுவனம் மறுத்திருக்கிறது.

இந்திய அரசாங்கத்தின தடையை உறுதிப்படுத்திய தொண்டு நிறுவனம், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை வெளிநாட்டு நிதி கணக்குகள் ஒன்றையும் கையாள்வதில்லை என்றும் அறிவித்திருக்கிறது.

முன்னதாக, இந்த தொண்டு நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளை அரசாங்கம் முடக்கி வைத்திருப்பதாக மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி குற்றம் சாட்டியிருந்தார். ஆனால் அதை அரசாங்கம் மறுத்திருந்தது.

கொல்கத்தாவைத் தளமாகக் கொண்டு செயல்பட்ட இந்தத் தொண்டு நிறுவனத்தை *1950* ஆம் ஆண்டு றோமன் கத்தோலிக்க கன்னியாஸ்திரியான அன்னை திரேசா ஆரம்பித்திருந்தார். உலகில் உள்ள மிகச் சிறந்த கத்தோலிக்க தொண்டு நிறுவனங்களில் இதுவும் ஒன்று எனக் கூறப்படுகிறது. அன்னை தெரேசாவின் மனிதாபிமானப் பணிகளுக்காக *1979* இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவர் இறந்து *19* வருடங்களின் பின்னர் *2016* இல் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களால் அன்னை திரேசா ஒரு புனிதராகப் (Saint) பிரகடனப்படுத்தப்பட்டார்.

இந்தியாவின் மோடி அரசாங்கம் இந்தியாவைத் தளமாகக் கொண்டு செயற்படும் தொண்டு நிறுவனங்களினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் வெளிநாட்டு பண நன்கொடைகளை மட்டுப்படுத்தி இருந்தது. கடந்த வருடம் மோடி அரசு, கிறீன்பீஸ் (Greenpeace) மற்றும் அம்னெஸ்ரி இன்டர்நேசனல் (Amnesty International) என்பனவற்றின் வங்கிக் கணக்குகளை முடக்கியிருந்தது.

ஆசியாவைப் பொறுத்தவரை பிலிப்பைன்ஸ்சுக்கு அடுத்ததாக இந்தியாவில்தான் அதிக கிறிஸ்தவர்கள் (*24* மில்லியன் – சனத்தொகையில் *2* வீதம்) வாழ்கிறார்கள்.

மோடியின் இந்துத்துவ இந்திய அரசாங்கம் இந்துக்களை கிறிஸ்தவர்களாக அல்லது இஸ்லாமியர்களாக மதம் மாற்றும் நடவடிக்கைகளையிட்டு கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மோடியின் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் கடுமையான விதிகளுடன் கூடிய மதமாற்றத் தடைச் சட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன.

**பிந்திய செய்தி**

அன்னை தெரசாவின் தொண்டு நிறுவனத்தின் கணக்குகள் முடக்கம் மற்றும் அதன் வெளிநாட்டு உதவி பெறும் உரிம இரத்து போன்றவை இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது. காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சி தலைவர்கள் இதற்கு கண்டனம் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து தெரேசா தொண்டு நிறுவனத்தின் நன்கொடை உரிமத்தை மத்திய அரசு ஜனவரி 8ந் திகதியிலிருந்து மீண்டும் வழங்கி இருக்கின்றது. இதன் மூலம் இந்த நிறுவனம் இனிமேலும் வெளிநாட்டு உதவிகளை பெற வழி பிறந்துள்ளது. இதைப்போலவே இந்த நிறுவனத்தின் வங்கி கணக்குகளின் முடக்கமும் நீங்கியுள்ளது. இதனால் தங்கள் கணக்குகளில் உள்ள நிதியை அந்த நிறுவனம் செலவழிக்க முடியும். இந்தத் தடை நீக்கத்தின் மூலம் நிறுவனத்தின் சேவை தொடரும்.

# சீனத் தூதுவரின் உள்ளன்புமிக்க வட மாகாண விஜயம்!

இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்கொங் (Qi Zhenhong) இலங்கையின் வட பகுதிக்கு டிசம்பர் 15 முதல் 17 வரை விஜயம் மேற்கொண்டதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்திருக்கிறது.

தூதுவர் தனது விஜயத்தின் போது வடக்கில் உள்ள பல சரித்திர மற்றும் கலாச்சார முக்கியத்துவம் உள்ள இடங்களுக்குச் சென்றுள்ளார். இது பற்றி சீனத் தூதராலயம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

“ஒரு வருடத்துக்கு முன்னர் தூதுவர் சீ தனது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்த போது, வடக்கிற்கு ஒரு அறிமுக மற்றும் அவதானிப்பு பயணத்தைச் செய்வதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், பெருந்தொற்று நோய் காரணமாகவும், வேலைப்பளு காரணமாகவும் அதை விரைந்து நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது.

தூதுவர் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை டிசம்பர் 15 ஆம் திகதி பிற்பகல் யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்டதுடன் ஆரம்பித்தார். யாழ்ப்பாண மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் அவரை அங்கு தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி வரவேற்றார். தூதுவர் சென்கொங் நூலகத்தை விரிவாகச் சுற்றிப் பார்வையிட்டதுடன், ஆசியாவில் நன்கு அறியப்பட்ட இந்த நூலகத்தின் நூல் தொகுப்புகளை மேலும் விரிவாக்கி அதன் ஆற்றலைப் பெருக்கும் வகையில் பல்வேறு மொழிகளிலான ஒரு தொகுதி நூல்களையும், 5 மடிக் கணினிகளையும் அன்பளிப்புச் செய்தார்.

டிசம்பர் 15 ஆம் திகதி மாலை வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்களை ஆளுநர் வதிவிடத்தில் சந்தித்து நிறைவான பேச்சுவார்த்தை நடத்தினார். உள்ளூர் தமிழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் பொருட்டு எவ்வாறு சீனாவும் வட மாகாணமும் கூட்டாகச் செயல்படுவது என்பது குறித்து பரந்துபட்ட விடயங்களை இருவரும் விவாதித்தனர். அதன் போது, வட மாகாணத்திலுள்ள கடல் தொழில், கடற்றொழில் உபகரணங்கள், கைத்தொழில்கள், தகவல் தொழில்நுட்பம் என்பனவற்றில் அதிக சீன முதலீடுகளைச் செய்யும்படியும்,



Qi Zhenhong

அதிக உதவிகளை அளிக்கும்படியும் தூதுவரிடம் ஆளுநர் தியாகராஜா வேண்டிக் கொண்டார்.

ஆளுநர் செயலகத்தின் வேண்டுகோளை ஏற்று, வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா ஒன்று வீதம் 5 நடமாடும் நீர் சுத்திகரிப்பு தொகுதிகளை தூதுவர் அன்பளிப்புச் செய்தார். உள்ளூர் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட உயர்ந்த தரத்திலான இந்த நடமாடும் நீர் சுத்திகரிப்புத் தொகுதிகள் இலங்கைக் கடற்படையால் உருவாக்கப்பட்டவையாகும். இவை பல்வேறு பகுதிகளிலுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சுத்தமான குடிநீரை வழங்கும்.

டிசம்பர் 16 ஆம் திகதி காலை தூதுவர் சீ சென்கொங்கும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ்ப்பாணம் – அரியாலை கிழக்கில் அமைந்துள்ள கடலட்டைப் பண்ணையைப் (Guilan Sea Cucumber Hatchery and Farm) பார்வையிட்டனர். இதை நிர்வகிக்கும் சீன நிறுவனம் ஆயிரக்கணக்கான உள்ளூர் மீனவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதையும், மில்லியன் கணக்கான டொலர்கள் வருவாய் ஈட்டுவதையும், இலங்கைக்கு அதன் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதையும் கண்டு அவர்கள் பிரமித்துப் போயினர். அதே நேரத்தில் இந்தப் பண்ணை அரசாங்க அதிகாரிகள், உள்ளூர் மீனவர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு முக்கியமான கற்றல் மற்றும் நடைமுறைப் பயிற்சி என்பனவற்றுக்கான களமாகவும் திகழ்கின்றது. இந்த நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்தி, கடற்றொழில் அபிவிருத்தி தொழிற்துறையை மேலும் கவரும் வண்ணம் ஆக்குமாறு கடற்றொழில் அமைச்சும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

டிசம்பர் 17 ஆம் திகதி சீனத் தூதுவர் சீ சென்கொங் தனது அதிகாரிகள் முழுவுடனும், சீன மற்றும் இலங்கை ஊடகவியலாளர்களுடனும் மன்னார் தோட்டவெளியில் அமைந்துள்ள New Silk Road Foodstuff factory என்ற தொழிற்சாலைக்கு அவதானிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். சீன தொழில் முயற்சியாளர்களின் முதலீட்டில் இயங்கும் இந்தத் தொழிற்சாலையில் அயல் கிராமங்களைச் சேர்ந்த 100 பேர் வரை தொழில் புரிவதுடன், அவர்களில் 85 வீதமானோர் பெண்களாவர். இந்தத் தொழிற்சாலை இலங்கையின் ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களுக்கு நிலையான நிரந்தர வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதுடன், இந்தத் தொழிற்சாலையில் இருந்து மாதாந்தம் 300,000 மீன் ரின்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலை புதிய உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்களுக்கான உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்கிறது. அத்துடன் அமெரிக்க டொலர் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்க மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களில் அதிக முதலீட்டையும் செய்துள்ளது.

இன்றைய கொவிட் – 19 பெருந்தொற்றைச் சமாளிக்கும் வகையிலும், சீனத் தூதுவர் தனது உறுதியான ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கும் வகையிலும், வட மாகாணத்தைச் சேர்ந்த 2,500 மீனவக் குடும்பங்களுக்கு தலா 5,500 ரூபா பெறுமதி வாய்ந்த உணவுப் பொதிகளையும், 20 மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த மீன்பிடி உபகரணங்கள், கொவிட் தடுப்புச் சாதனங்கள் என்பனவற்றையும் அன்பளிப்பாக வழங்கினார். இவற்றைக் கையளிக்கும் வைபவங்களை யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் உள்ள மீனவ சங்கங்கள் டிசம்பர் 16 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தன. சரியான நேரத்தில் செய்யப்பட்ட இந்த உதவியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், உள்ளூர் தமிழ் மீனவர்களும் வெகுவாகப் பாராட்டினார்கள். அத்துடன், 1.6 மில்லியன் சைனோபாம் தடுப்பூசிகளை

(Sinopharm Vaccines) வழங்கியதற்காக, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு, தமது நன்றியைச் சீனத் தூதுவருக்குத் தெரிவித்ததுடன், தமது பிரதேசத்தில் சமூக – பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக மேலும் கூடுதலான உதவியை வழங்குமாறும் சீனாவைக் கேட்டுக் கொண்டனர்.

தூதுவர் சென்கொங் டிசம்பர் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தின் மத்தியில் சமய மற்றும் கலாச்சாரத்தின் அடையாளச் சின்னமாக அமைந்துள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். சீனத் தூதுக் குழுவினர் அப்போது ஆலயத்துக்கு அன்பளிப்பு வழங்கியதுடன், அங்கு நடைபெற்ற பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டனர். தூதுவர் சீ சென்கொங் மற்றும் அவரது தூதுக் குழுவினரின் நட்புறவு மற்றும் ஒத்துழைப்புக்கான மூன்று நாள் விஜயம், வட மாகாண அரசாங்கம், கடற்றொழில் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்ளூர் சுற்றுலாத்துறை என்பனவற்றின் மனம் நிறைந்த அன்பான உபசரிப்பு மற்றும் ஆதரவைப் பெற்றுக் கொண்டது. விஜயத்தின் முடிவில் தூதுவர் சீ, தமக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்புக்குத் தமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்ததுடன், வரவிருக்கும் சீன – இலங்கை இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 65 ஆண்டு தினத்தையொட்டித் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

# மீன் ஏற்றுமதி அதிகரிப்பு!

2021 இல் மீன் மற்றும் கடலுணவு சம்பந்தமான உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி தொகையிலும் வருவாயிலும் முன்னைய காலங்களை விட அதிகரித்திருக்கிறது. இது சம்பந்தமான புள்ளி விபரங்களை கடற்றொழில் அமைச்சு வெளியிட்டிருக்கிறது.

அமைச்சு வெளியிட்ட புள்ளிவிபங்களின்படி, 2021 நொவம்பர் வரை 24,229 மெட்ரிக் தொன் கடல் உணவு வகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 11 மாதங்களில் 287 மில்லியன் டொலர்கள் அமைச்சுக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக, கடல் உணவு வகைகளின் இறக்குமதியும் குறைவடைந்துள்ளது. 2020 இல் 85,809.11 மெட்ரிக் தொன் (191.3 மில்லியன் டொலர்கள் பெறுமதி) கடல் உணவு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் நாட்டில் கடல் தொழில் வளர்ச்சி அடைந்ததால், 2021 இல் அது 52,246 மெட்ரிக் தொன்களாகக் (116 மில்லியன் டொலர்கள் பெறுமதி) குறைவடைந்துள்ளது. இதற்கு முதல் 2015 இல்தான் ஆகக் கூடுதலாக, 120,046 மெட்ரிக் தொன் கடல் உணவு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

கடல் தொழிலின் வளர்ச்சி மீனவர்களின் வாழ்விலும் ஓரளவு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வட பகுதிக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இடம் பெறாது விடின், கடல் உணவுகளின் உற்பத்தி தற்போதையதை விட மேலும் அதிகமாக இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. ஏனெனில், வட பகுதிக் கடல்தான் நாட்டிலேயே அதிக கடல் உணவு வகைகளின் உற்பத்திக்கு ஏதுவான பகுதியாகக் காணப்படுகிறது.

தற்போது கடற்றொழில் அமைச்சராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டகளஸ் தேவானந்தா கடமையாற்றி வருகின்றார். இராஜாங்க அமைச்சராக காஞ்சனா விஜேசேகர பணி புரிகிறார். கடற்றொழில் அமைச்சின் கடல் உணவு ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு இராஜாங்க அமைச்சரே பொறுப்பாக இருந்து வருகிறார்.

**5ம் பக்கத்தொடர்ச்சி…**

சி ஜின்பிங்கின் (Xi Jinping) சிந்தனை கொண்டுள்ளமை புதியதொரு பாய்ச்சலாகும். அதன் மூலம் உலக சோசலிசத்தின் மீது புதிய வகையிலான பிம்பமொன்று உருவாகி, சோசலிச சக்திகளுக்கும் முதலாளித்துவத்துவ சக்திகளுக்கும் இடையிலான உலக ரீதியிலான சம நிலையில் சாதகமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அது முழு மனித குலத்தையும் முன்னேற்றும் என்றார்.

தோழர் சோங்கின் உரையைத் தொடர்ந்து, ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி, ஹங்கேரிய தொழிலாளர் கட்சி, இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி, கனடிய கம்யூனிஸ்ட் கட்சி, பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சி, டென்மார்க் கம்யூனிஸ்ட் கட்சி, பின்லாந்து கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சி, அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றின் தலைவர்கள் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தின் முடிவுரையை நிகழ்த்திய சீ.க.க. யின் சர்வதேசத் திணைக்கள பதில் தலைவர் சியான் ஹொங்சான் (Qian Hongshan) உலகம் முழுவதுமுள்ள எல்லா மார்க்சிய கட்சிகளினதும் மூலோபாயம் மனிதகுல விடுதலையே என்பதை மீண்டும் சுட்டிக் காட்டினார்.

இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்த சோசலிச சீனாவின் நண்பர்கள் அமைப்பின் இணையாசிரியர்களான கெய்த் பென்னெற் (Keith Bennett) மற்றும் கார்லோஸ் மாற்றினெஸ் (Carlos Martinez) எழுத்து மூலமான உரைகளைச் சமர்ப்பித்தனர்.


**6ம் பக்கத்தொடர்ச்சி…**

தேசிய பொருளாதாரத்தைச் சீரழித்தல் என்பனவே இன்றைய நெருக்கடிக்குக் காரணம் எனக் கருதுகின்றது என குணசேகர அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக் குறித்தும், விலைவாசிகள் அதிகரித்துச் செல்வது பற்றியும் கருத்துத் தெரிவித்த குணசேகர, அரசாங்கம் விலைகளைக் கட்டுப்படுத்துவதிலிருந்து விலகியிருப்பது தவறு என்றும், அது பொது மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

தற்போதைய பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 1956 இற்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து தெளிவு இல்லை. பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்மையான ஏகாதிபத்திய – எதிர்ப்பு மற்றும் தேசபக்த கொள்கைகளில் நாட்டமில்லை. 1977 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமை தாங்கிய ஐ.தே.க. அரசாங்கத்தின் கொள்கைகளே இன்றும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன. எனவே, நாடு முன்நோக்கிச் செல்வதானால் அடிப்படையான மாற்றம் ஒன்று தேவை என டியு குணசேகர குறிப்பிட்டார்.

# இலங்கை சர்வதேச சதியினால் பாதிக்கப்பட்டுள்ளதா?



**பேராசிரியர் திஸ்ஸ விதாரண**
**(Prof. Tissa Vitharana)**

உலகின் உண்மையான ஆட்சியாளர்கள் ஒரு சில இலட்சாதிபதிகளும், பெரும் பணக்கார ஆதிக்கவாதிகளும் என்பது நன்கறிந்த விடயம். அவர்களே அமெரிக்காவின நிதி வளத்தைக் கட்டுப்படுத்துவதுடன், தமது நிதி சக்தியைப் பயன்படுத்தி அமெரிக்க ஜனாதிபதியாக வருபவரைத் தீர்மானிப்பதுடன், அதன் அரசாங்கத்தை உருவாக்குபவர்களாகவும் உள்ளனர். நீண்ட காலமாக அமெரிக்கா உலகின் முதல்நிலை பொருளாதாரத்தைக் கொண்டிருப்பதுடன், உலக பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் நிலையிலும் இருக்கின்றது. அமெரிக்காவின் டொலரே உலகளாவிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் நாணயமாக இருக்கின்றது. அமெரிக்கா சீனாவுக்கு பெரும் கடனாளியாக (3 றில்லியன் - Trillion - டொலர்கள் என கணிக்கப்படுகிறது) இருந்த போதிலும், அதைச் சமாளிக்க மேலதிக டொலரை அச்சிடுகின்றது. இந்த நிலைமையால் சீனா உலகின் முதல்தர பொருளாதார நிலைக்கு உயர்வதுடன், அதன் யுவான் (Yuan) நாணயம் உலக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தும் என்ற நிலையும் உருவாகும். இது உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதுடன், பெரும் பல்தேசிய நிறுவனங்கள் (Multinational Corporations) மூலம் அது நடத்தும் சுரண்டலையும் முடிவுக்குக் கொண்டு வரும். அமெரிக்க பொருளாதாரத்தின் வீழ்ச்சி முதலாளித்துவத்துக்கு உலகளாவிய நெருக்கடியை ஏற்படுத்துவதுடன், கொவிட் - 19 (Covid – 19) பெருந்தொற்று நிலைமையையும் மேலும் மோசமாக்கும்.

அமெரிக்கா தனது செல்வாக்கு மிக்க நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள சகல வழிகளிலும் முயற்சிக்கிறது. சதித்தனமாகவும் திட்டமிட்டும் நடத்தப்படும் இந்தத் திட்டத்தால் துரதிஸ்ட்டவசமாக இலங்கையும் தவிர்க்க முடியாமல் இதன் ஒரு பங்காளி ஆகி இருக்கிறது. அவர்கள் கிழக்காசிய நாடுகளான சீனா, வியட்நாம், தென் கொரியா போன்ற நாடுகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் வர்த்தக விரிவாக்கத்தைத் தடுக்கின்றனர். அமெரிக்க கைத்தொழில் முதலாளிகள் தமது இலாபத்தை அதிகரிப்பதற்காக சீனா உட்பட கிழக்காசிய நாடுகளுக்கு தமது முதலீடுகளையும் தொழில்நுட்பத்தையும் மாற்றியதன் காரணமாகவே சீனா தலைமையிலான கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரங்கள் விரிவடைந்தன. இப்பொழுது அமெரிக்கா இதைத் தடுப்பதற்காக சீன இறக்குமதிகள் மீது மேலதிக வரிகளை விதித்துள்ளது. இந்த செயற்பாட்டினால் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஒரு வர்த்தகப் போர் உருவாகியுள்ளது. இதன் விளைவு நிச்சயமற்றதாகும். அமெரிக்காவின் முயற்சிகள் தோல்வி அடையுமானால் அது ஒரு இராணுவ யுத்தம் என்ற தீவிர நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

ஐ.நா. முறைப்படியும், சர்வதேச சட்டங்களின் படியும் பசுபிக் சமுத்திரமும் இந்து சமுத்திரமும் வெவ்வேறான இரண்டு மண்டலப் பகுதிகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, யப்பான் என்பன பசுபிக் மண்டல நாடுகள். இந்தியா, இலங்கை என்பன இந்து சமுத்திர மண்டல நாடுகள். சர்வதேச சட்டப்படியும், ஐ.நா. சாசனப்படியும் நாடுகள் தமது சொந்த மண்டலங்களில் இராணுவத் தளங்களை வைத்திருக்கும் உரித்துடையவை. சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமை தாங்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி – லங்கா சமசமாஜக் கட்சி – கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டரசாங்க காலத்தில் 'இந்து சமுத்திரம் ஒரு சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும்' என்ற ஒரு தீர்மானம் இலங்கையால் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு அது பெரும்பாலான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. அதன் காரணமாக அமெரிக்கா டியாகோ – கார்சியாவில் (Diego-Garcia) வைத்திருந்த இராணுவ தளத்தை இழந்ததுடன், அந்தத் தீவுக்குரிய மொரிசஸ் (Mauritius) நாட்டிடம் மீளவும் ஒப்படைக்குமாறு சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (International Criminal Court) உத்தரவும் இட்டது. அப்பொழுதே அமெரிக்கா இந்து சமுத்திரத்துக்கான தனது இராணுவத் தளத்தை இலங்கையில் அமைப்பது என தெளிவாகத் தீர்மானித்துவிட்டது. அமெரிக்கா இரண்டு சமுத்திரங்களையும் இணைத்து தனது இராணுவத் தளத்தை அமைக்கும் எண்ணத்துடன் இந்தோ – பசுபிக் சமுத்திரம் (Indo – Pacific) என்ற வார்த்தைப் பதத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. பசுபிக் சமுத்திர மண்டல நாடுகளான அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான ஆஸ்திரேலிய, யப்பான் என்பனவும் அதன் மூலம் இலங்கையில் தமது இராணுவத் தளத்தை நிறுவ முடியும். ஏற்கனவே அமெரிக்கா இந்தியாவையும் கொண்டு வந்துவிட்டபடியால், அந்த நான்கு நாடுகளும் இணைந்து 'குவாட்' (Quad) என்ற அமைப்பை உருவாக்கிவிட்டன. இலங்கையையும் இந்தக் கூட்டில் கொண்டு வருவதே நோக்கமாகும்.

2015 இல் 'நல்லாட்சி' (Yahapalana) அரசாங்கம் அமெரிக்காவுடன் கூட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் வகையில் ஏசிஎஸ்ஏ (ACSA) உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுவிட்டது. ஆனால் அதிர்ஸ்டவசமாக எம்சிசி (MCC) மற்றும் சோபா (SOJA) உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக அந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. அந்த எம்சிசி மற்றும் சோபா உடன்படிக்கைகளில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் கைச்சாத்திடாமைக்காக லங்கா சமசமாஜக் கட்சி நன்றி தெரிவித்துக் கொள்கிறது. எம்சிசி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருந்தால், அதன்

மூலம் அமெரிக்காவின் பல்தேசியக் கொம்பனிகள் இலங்கையின் பொருளாதாரத்தைச் சுரண்ட முடிந்திருப்பதுடன், இலங்கை ஒரு ‘வாழைப்பழ குடியரசாக’வும் (Banana Republic) மாறியிருக்கும். சோபா உடன்படிக்கை முழு இலங்கையையும் அமெரிக்க இராணுவத் தளமாக மாற்றியிருக்கும். லங்கா சமசமாஜக் கட்சி தற்போதைய பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பங்காளியாக இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

**யுகடனவி** (Yugadanavi) **சம்பவம்**

ஆனால் எமது மகிழ்ச்சி குறுகிய காலமுடையது எனத் தெரிகிறது. யுகடனவி சம்பவம் என்பது எமது வளங்களை கள்ளத்தனமான முறையில் அமெரிக்க கொம்பனி ஒன்றுக்கு விற்ற சம்பவமாகும். இது அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 20 ஆவது திருத்தத்தின் மூலமாக இரட்டைக் குடியுரிமையுள்ள அமெரிக்க பிரஜை ஒருவர் நிதியமைச்சராக வந்ததைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஒன்றாகும். இதன் மூலம் இவர்கள் குள்ளத்தனமான முறையில் அமெரிக்காவின் எண்ணத்தை நிறைவேற்ற அதன் உள்ளூர் கூட்டாளிகளுடன் இணைந்து இந்த அரசாங்கத்தின் ஊடாக எம்சிசி மற்றும் சோபா உடன்படிக்கைகளை நிறைவேற்றும் நோக்கம் கொண்டதாகும்.

‘நல்லாட்சி’ அரசாங்க காலத்தில் அலரி மாளிகையுடன் (Temple Trees) இணைந்த சீஐஏ (CIA) அலுவலகத்தில் அரசியல், பொருளாதார, இராணுவத் துறைகளில் ஆலோசகர்ளும் ஆய்வாளர்களும் செயல்பட்டது அரசியல் வட்டாரங்களில் நன்கு அறியப்பட்ட விடயமாகும். 2018 ஒக்ரோபரில் ஒரு குறுகிய காலம் பொதுஜன பெரமுன அரசாங்கம் பதவிக்கு வந்து ரணில் விக்கிரமசிங்க பிரதமராகத் தொடர முடியாமல் போனபோது, அவர் அதை ஏற்க மறுத்து அலரிமாளிகையில் இருந்த தனது அலுவலகம் மற்றும் வசிப்பிடத்தில் இருந்து நகர மறுத்ததிற்குக் காரணம், இந்த அமெரிக்க சிந்தனைக் குழாம் (Think Tanks) அங்கிருந்தமையினால் ஆகும். இந்த நிலைமை 2020 ஓகஸ்டில் பொதுத் தேர்தல் நிகழ்ந்து மகிந்த ராஜபக்ஸ பிரதமராகப் பதவி ஏற்கும் வரை தொடர்ந்தது. அலரி மாளிகையில் அவர்கள் இருந்த காலத்தில் ‘நல்லாட்சி’ அரசாங்கம் நவ தாராளவாதக் (Neoliberal) கொள்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தியது. அவர்கள் முன்னைய மத்திய - இடதுசாரி (Centre – Left) அரசாங்கத்தால் வகுக்கப்பட்டிருந்த முற்போக்கான தேசிய பொருளாதாரக் கொள்கையை தேசிய ரீதியிலும் சர்வதேசிய ரீதியிலும் செயலிழக்க வைத்து சந்தைச் சக்திகளை (Market Forces) ஊக்குவித்தார்கள். இதன் விளைவாக எமது உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திக்குப் பதிலாக வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களை, குறிப்பாக, அமெரிக்க மற்றும் ஐரோப்பியப் பொருட்கள் தங்குதடையின்றி நாட்டுக்குள் வர அனுமதிக்கப்பட்டது. உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது தொழில்களை மூடினார்கள் அல்லது தமது ஊழியர்களை நிறுத்தினார்கள். இதனால் சுய- சார்பை இலக்காகக் கொண்டிருந்த தேசிய பொருளாதாரம் நொருங்கிப் போனது. இதன் விளைவாக முன்னோக்கிச் சென்று கொண்டிருந்த வெளிநாட்டு வர்த்தகச் சமநிலை பாதிக்கப்பட்டு, எமது அந்நியச் செலாவணி கையிருப்பு வீழ்ச்சி அடைந்தது. வெளிநாட்டு கடன் பெறுகை அதிகரித்து நாடு கடனாளியாகியது. சராசரியாக 8 பில்லியன் (Billion) டொலர்களாக பேணப்பட்டு வந்த எமது அந்நியச் செலாவணிக் கையிருப்பு 1.5 பில்லியனாக வீழ்ச்சி அடைந்தது. கடனை அடைப்பதற்காக எமது வளங்கள் மிகவும் மலிவான விலையில் அமெரிக்க மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு விற்கப்பட்டன. ‘நல்லாட்சி’ அரசாங்கம் அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளினதும் நலன்களுக்காக இந்த நவ – தாராளவாதக் கொள்கைகளை எமது நாட்டு மக்களின் பணத்தில் நடைமுறைப்படுத்தியது. அதிர்ஸ்ட்டவசமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்து மகிந்த ராஜபக்சவை பிரதமராக்கினார். இதனால் எழுந்த பொருளாதார, சமூக நெருக்கடியால் நல்லாட்சி அரசாங்கம் அமெரிக்காவுடன் எம்சிசி மற்றும் சோபா உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தது. நல்லாட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதின் மூலம் இலங்கையும் அதன் மக்களும் பாதுகாக்கப்பட்டார்கள்.

**அமெரிக்க நவ தாராளவாதக் கொள்கைகள்**

அமெரிக்க நவ தாராளவாதக் கொள்கைகளால் அழிவுக்குள்ளானதன் காரணமாக அவர்களை நிராகரித்த மக்களைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, தற்போதைய பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் அந்த சக்திகளை முற்றுமுழுதாக ஒழித்துக்கட்ட வேண்டும். வறிய மக்களின் செலவில் சில தனிப்பட்ட செல்வந்தர்களுக்கு முன்னுரிமை வழங்கும் நிலையை மாற்றி இலங்கையின் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட முறையில் பாரம்பரிய மனிதாபிமான மற்றும் கூட்டுறவு முறையிலான கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். எல்லா மக்களினதும் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் முன்னரிமை வழங்கப்பட வேண்டும். சிறீமாவோ பண்டாரநாயக்கவை பிரதமராகவும், டொக்டர் என்.எம்.பெரேராவை நிதியமைச்சராகவும் கொண்டிருந்த மத்திய - இடதுசாரி கூட்டரசாங்கம் 1972 – 73 காலகட்டத்தில் ஏற்பட்ட பாரிய நெருக்கடியை (எண்ணெய் விலை 7 மடங்காகவும், உணவுப் பொருட்களின் விலை 10 மடங்காகவும் அதிகரித்திருந்த நேரத்தில்) எடுத்த நடவடிக்கைகளின் பாடங்களை லங்கா சமசமாஜக் கட்சி மிகவும் காத்திரமான முறையில் முன்வைக்க விரும்புகிறது. டொக்டர் என்.எம்.பெரேரா சுமையை ஏழை மக்களின் மேல் சுமத்தாமல் செல்வந்தர்கள் மேல் சுமத்துவது எனத் தீர்மானித்தார். அவர் இறக்குமதிகளைக் கடுமையாகக் குறைத்து, விவசாயத்திலும் கைத்தொழிலிலும் உள்ளூர் உற்பத்தியை அதிகரித்து, தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுத்தார். அவர் பெரும் செல்வந்தர்கள் மீதான வரியை 70 சத வீதம் வரை உயர்த்தினார். ஆனால் தற்போதைய நெருக்கடி நிலையிலும் இது 14 வீதமாகவே இருக்கின்றது. தற்பொழுது 60 வீதத்திற்கும் அதிகமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் போராடிக் கொண்டிருக்கும் ஏழை மக்கள் மீது இந்தச் சுமை விழுந்துள்ளது. சில மக்கள் ஒரு நாளைக்கு ஒருவேளை உணவையே உட் கொள்கின்றனர்.

போசாக்கின்மை 18 வீதத்தால் அதிகரித்து அதன் காரணமாக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் உடல் மற்றும் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமை நாட்டை எதிர்காலத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கும்.

முன்பு கூட்டுறவு முறை பலப்பட்டிருந்ததால், உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் நேரடித் தொடர்பை ஏற்படுத்தி, இடைத் தரகர்கள் இலாபம் பெறுவதைத் தடுத்திருந்தது. இன்று எல்லாப் பொருட்களினதும், குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களின், விலைகள் அதிகரித்து அதன் காரணமாக மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டின் ஒவ்வொரு பிரசைகளுக்கும், அவர்கள் எந்த இனம், சமயம், சாதி சார்ந்தவர்களாக இருப்பினும், அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின கடமையாகும். அத்துடன், மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாராந்தம் உலர் உணவு வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும். இதை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்பட வேண்டும். நஸ்டத்தில் இயங்கும் எல்லா நிறுவனங்களையும் அதன் உரிமையாளர்களும் ஊழியர்களும் இணைந்து ஒருமைப்பாட்டுடன் செயற்படுத்தி அதில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பங்கை சம்பளத்திற்கு மேலாக வழங்க வேண்டும். இது பல ஐரோப்பிய நாடுகளிலும், ஆர்ஜன்ரீனா, இந்தியா உட்பட பல மூன்றாம் உலக நாடுகளிலும் வெற்றிகரமாகச் செயற்படுகின்றது. இந்தியாவில் டாட்டா (TATA) நிறுவனத்துக்குச் சொந்தமான 63,000 ஹெக்டெயர்கள் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. அவை நஸ்டத்தில் இயங்கியதால் அதனால் வரிகளைச் செலுத்த முடியவில்லை. இந்த நிலைமையில் மாநிலத்தில் இருந்த இடதுசாரி அரசாங்கம் ஒருமைப்பாட்டுக் கொள்கையைப் பிரயோகித்ததால், இப்பொழுது உற்பத்தி அதிகரித்துள்ளதுடன் பெரும் இலாபம் ஈட்டி வருகின்றது.

சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund) தனது நவ தாராளவாதக் கொள்கைகளின் அடிப்படையிலான நிபந்தனைகளை ஏற்க வைத்து வழங்கும் கடன்கள் இலங்கைக்கோ அதன் மக்களுக்கோ தேவையில்லை. இது அமெரிக்க மற்றும் வெளிநாட்டு செல்வந்தர்களின் நலன்களுக்கு உதவுதே தவிர, எமது நாட்டு ஏழை மக்களுக்கு உதவாது. அன்றைய லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும், நிதியமைச்சருமான டொக்டர் என்.எம்.பெரேரா அவர்களின் உதாரணத்தைப் பின்பற்றுவதன் மூலம், இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டு முன் செல்ல முடியும்.

(பேரசிரியர் திஸ்ஸ விதாரண கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றில் எழுதிய ஒரு கட்டுரையின் சாராம்சமே மேலே தரப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சரான திஸ்ஸ விதாரண, தற்போது லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவராகவும் இருந்து வருகின்றார். அவர் காலஞ்சென்ற முன்னாள் நிதியமைச்சர் டொக்டர் என்.எம்.பெரேராவின் மருமகன் முறையானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது)

**தமிழில்: மணி**

# இந்தியாவின் 22% சொத்துக்கள் 1% பேரிடம் குவிந்துள்ளன




இந்தியாவில் ஏழைகள் எண்ணிக்கையும், மக்களிடையே சமத்துவமின்மையும் அதிகரித்து வருவதாகவும், 2021ம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதி வளங்கள் ஒரு விழுக்காடு மக்களிடம் உள்ளதாகவும் 13 சதவீத வருமானம் மட்டுமே நாட்டின் பாதியளவு மக்களிடம் இருக்கிறது என பிரெஞ்சு பொருளாதார ஆய்வறிஞர் தோமஸ் பிக்கெட்டியை (Thomas Piketty) உள்ளடக்கிய ஆய்வுக்குழுவின் ‘World Inequality Report 2022’ என்ற ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

உலகில் சமத்துவமற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் உள்ளது. இந்தியாவில் வயது வந்தோரின் சராசரி ஆண்டு வருவமானம் என்பது 2 இலட்சத்து 4200 ரூபாவாக இருக்கிறது. மக்கள் தொகையில் 50 சதவீத மக்களின் ஆண்டு வருமானம் என்பது வெறும் 53 ஆயிரத்து 610 ரூபாவாக இருக்கிறது. ஆனால், 10சதவீத மக்கள் 20 மடங்கு அதிகமாக வருமானம் ஈட்டுகிறார்கள், அதாவது ஆண்டுக்கு 11 இலட்சத்து 66 ஆயிரத்து 520 ரூபா வருமானம் பெறுகிறார்கள் என்கிறது அவ்வாய்வறிக்கை.

இந்தியா ஏழைகள் நிரம்பிய, சமத்துவமற்ற நாடாகவும், செல்வந்தர்கள் உயர்ந்து தனித்துவமாகத் தெரியும் நாடாக இருந்து வருகிறது. இந்திய மக்களின் சராசரி குடும்பச் சொத்து என்பது 9 இலட்சத்து 83 ஆயிரத்து 10 ரூபாவாக இருக்கிறது. கடந்த 1980களின் நடுப்பகுதியில் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடு நீக்கம், தாராளமயமாக்கள் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டபின்,

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# சிலியில் இடதுசாரி ஆட்சி!



வீ. சிங்கம்

தென் அமெரிக்க நாடான சிலியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 35 வயது நிரம்பிய இடதுசாரி வேட்பாளரான கப்பிரியேல் பொறிக் (Gabriel Boric) வெற்றி பெற்றுள்ளார். அதன் மூலம் சிலியில் தெரிவான முதல் மிக இள வயது ஜனாதிபதி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரி வேட்பாளரான கப்பிரியேலுக்கும், தீவிர வலதுசாரி வேட்பாளரான ஜோஸ் அன்ரோனியோ காஸ்ற் (Jose Antonio Kast) என்பவருக்கும் இடையில் கடுமையான போட்டி இருந்தது. ஆனால் தேர்தல் முடிவில் கப்பிரியேல் 56 வீத வாக்குகள் பெற்று வெற்றியீட்ட, வலதுசாரி வேட்பாளர் 44 வீத வாக்குகள் மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தார்.

சிலியில் கடந்த சில ஆண்டுகளாக சமத்துவமின்மையும் ஊழலும் தலைவிரித்தாடிய ஒரு சூழலில்தான் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. வெற்றி பெற்ற புதிய ஜனாதிபதி கப்பிரியேல் தனது வெற்றி உரையில், “ஒரு சிலருக்கு மட்டும் சலுகை வழங்கும் சிலியின் இன்றைய நிலையை மாற்றியமைப்பதற்காக நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் கடுமையான முயற்சிகளை மேற்கொள்வேன்” எனத் தெரிவித்துள்ளார்.

சிலியில் வறுமை மற்றும் சமத்துவமின்மை என்பனவற்றுக்கெதிராக தொடர்ச்சியான போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்து வந்துள்ளன. மாணவர்கள் அதிகம் பங்குபற்றிய இப்போராட்டங்களில் கப்பிரியேல் முக்கியமான தலைமைப் பாத்திரம் வகித்தார். அதன் காரணமாக இந்தத் தேர்தலில் இளம் சந்ததியினர் கப்பிரியேலையே கூடுதலாக ஆதரித்தனர். அவரது வெற்றிக்கு அதுவும் ஒரு முக்கியமான காரணம்.

இந்தப் போராட்டங்கள் முதலாவதாக அரசாங்கம் 2019 ஒக்ரோபரில் புகையிரதக் கட்டணங்களை அதிகரித்த போது அதற்கெதிராக ஆரம்பமாகியது. முதலில் புகையிரத நிலையங்களை முற்றுகையிட்டு நடத்தப்பட்ட இப்போராட்டங்கள் பின்னர் பெரும் வீதிப் போராட்டங்களாக உருவெடுத்தன. அரசாங்கம் பொலிசையும் படையினரையும் உபயோகித்துப் போராட்டங்களை அடக்க முயற்சித்த போதிலும், போராட்டங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. போராட்டங்கள் பல்கிப் பெருகிய வண்ணம் இருந்தன.

இந்த நிலைமையில் அரசாங்கம் ஒரு நடவடிக்கையில் இறங்கத் தீர்மானித்தது. அதாவது, 1973 இல் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட சல்வடோர் அலன்டேயின் (Salvador Allende) அரசாங்கத்தை இராணுவச் சதி மூலம் கவிழ்த்து, அவரையும் கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றி சுமார் 25 ஆண்டுகள் காலம் அமெரிக்க ஆதரவுடன் இராணுவ சர்வாதிகார ஆட்சி நடத்திய பினோச்சே (Pinochet) உருவாக்கிய அரசியல் அமைப்பை மாற்றுவது குறித்து பொதுமக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பொன்றை நடத்தியது. அந்தக் கருத்துக் கணிப்பில் 80 சத வீதமான மக்கள் பினோசெட் உருவாக்கிய சர்வாதிகார அரசியலமைப்பை மாற்றி கூடுதல் சமத்துவமுள்ள புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரி வாக்களித்தனர்.

பினோச்சே ஆட்சிக்கு வந்ததும், நாட்டின் பொதுச் சொத்துக்கள் யாவற்றையும் தனியார்மயப்படுத்தினார். அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் கொம்பனிகளுக்கு தங்குதடையின்றிச் சுரண்டுவதற்காக நாட்டின் கதவுகளை அகலத் திறந்துவிட்டார். எதிர்க்கட்சிகளையும் தொழிற்சங்க அமைப்புகளையும் மாணவர் இயக்கங்களையும் இரும்புக் கரம் கொண்டு அடக்கினார். அலன்டேயின் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் தேடித்தேடிக் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் சிறைகளில் அடைக்கப்பட்டனர். மனித உரிமைகள் மிகவும் மோசமாக மீறப்பட்டன. பினோசெட்டின் இந்த நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் அமெரிக்காவின் பூரண ஆசீர்வாதம் இருந்தது.

சர்வாதிகாரி பினோசெட்டுக்குப் பிறகு சிலியில் பல ‘ஜனநாயக’ ஆட்சிகள் அமைந்தாலும் நிலைமைகள் மாற்றமடையவில்லை. தொடர்ந்தும் பினோசெட் வகுத்த எதேச்சாதிகார அரசியல் அமைப்பே நடைமுறையில் இருந்தது. (இலங்கையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வகுத்த எதேச்சாதிகார அரசியல் அமைப்பு 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்வது போல) அதனால் அதன் நீட்சியாக அரசாங்க ஒடுக்குமுறையும், எதேச்சாதிகாரமும், ஊழலும் தலைவிரித்தாடின. இந்த நிலைமைகள் காரணமாக மறுபக்கத்தில் மக்களின் போராட்ட இயக்கமும் படிப்படியாக வளர்ந்து வந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் சிலியில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து இடதுசாரி பேட்பாளரான இளைஞர் கப்பிரியேல் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். இனிமேல்தான் அவர் பல புதிய சவால்களை எதிர்நோக்கப் போகின்றார்.

அதாவது, இத்தனை வருட காலமும் அதிகாரத்தில் திளைத்து, ஊழலில் ஊறிய பிற்போக்கு சக்திகள் கப்பிரியேல் செய்யத் திட்டமிட்டுள்ள மக்களுக்குச் சார்பான முற்போக்கு மாற்றங்களைச் செய்ய அனுமதிப்பார்களா அல்லது 1973 இல் அலன்டேக்கு செய்தது போல இவருக்கும் செய்வார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# ஈரானிய எண்ணெய் கடனை அடைக்க தேயிலை ஏற்றுமதி!

ஈரான் மீதான அமெரிக்காவின் கடுமையான பொருளாதார தடைகளுக்கு மத்தியிலும் இலங்கை ஈரானுடன் தனது பாரம்பரிய நட்புறவைப் பேணி வருகின்றது. ஈரான் எண்ணெய் வளம் மிக்க நாடாக இருப்பதால், எண்ணெய் ஏற்றுமதி மூலமே அது அந்நியச் செலாவணியை ஈட்டி வந்தது. அதை முடக்குவதன் மூலம் ஈரானை தனது காலடியில் விழ வைக்க எண்ணிய அமெரிக்கா, ஈரானிடம் மற்றைய நாடுகள் எண்ணெய் வாங்கக்கூடாது எனத் தடை விதித்திருந்தது. ஆனால், அமெரிக்காவின் தடையை மீறி சீனா, ரஸ்யா உட்பட சில நாடுகள் ஈரானிடம் எண்ணெய் வாங்கி வருகின்றன. அந்த நாடுகளின் வரிசையில் இலங்கையும் ஒன்று. இந்த சில நாடுகளிடம் அமெரிக்காவுக்குச் சில தேவைகள் இருப்பதால் இந்த விவகாரத்தை கண்டும் காணாமல் இருந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈரானிடம் எண்ணெய் வாங்கிய கணக்கில் பழைய கடனான 250,925,169 அமெரிக்க டொலர்களை ஈரானுக்கு செலுத்த வேண்டிய நிலை இருந்து வந்தது. இலங்கை இன்று பாரிய டொலர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கி இருப்பதால், ஈரானுக்கான கடன் தொகையைச் செலுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்கி வந்தது. இலங்கையின் இந்த அவல நிலையை ஈரானும் புரிந்து கொண்டிருந்தது.

அதனால் இரு நாடுகளும் கூடிப்பேசி, இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை பயக்கும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துள்ளன. இதன்படி,



இலங்கை தான் ஈரானுக்கு வழங்க வேண்டிய பழைய கடன் பாக்கியை நிவர்த்தி செய்வதற்காக தனது தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்து கடனைத் தீர்க்கும்.

உலகில் இலங்கைத் தேயிலையை பல தசாப்தங்களாக வாங்கும் முதல் 10 நாடுகளில் ஈரானும் ஒன்று. ஆனால் 2016 இல் 47 வீதமாக இருந்த தேயிலை ஏற்றுமதி, பொருளாதாரத் தடையாலும், வங்கிக் கட்டுப்பாடுகளாலும், பணம் செலுத்துவதிலுள்ள சிக்கல்களாலும், ஈரானிய நாணயமான றியாலின் பெறுமதி குறைந்ததாலும், 2020 ஆம் ஆண்டில் 25 வீதமாகக் குறைந்துவிட்டது. அதனால் 2013 இல் அதியுச்சமாக 38.42 மில்லியன் கிலோகிராமாக இருந்த ஈரானுக்கான இலங்கைத் தேயிலை ஏற்றுமதி, 2020 இல் 14.73 மில்லியன் கிலோகிராமாகக் குறைந்துவிட்டது.

2012 நொவம்பரில் அமெரிக்கா ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்ததால், பணம் செலுத்துவதற்கான வங்கிப் பொறிமுறை ஈரானிய தேயிலை இறக்குமதியாளர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. அத்துடன் பொருளாதாரத் தடை காரணமாக இலங்கைத் தேயிலை ஏற்றுமதியாளர்கள் மூன்றாவது நாடுகள் மூலமே ஈரானுக்கு தேயிலை ஏற்றுமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இதனால் தேயிலை ஏற்றுமதியிலும், பணம் பெறுவதிலும் பல தடைகளும் கால தாமதமும் ஏற்பட்டது.

ஆனாலும், தற்போது இலங்கையும் ஈரானும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஏற்பாட்டின்படி, இலங்கை ஈரானுக்குச் செலுத்த வேண்டிய எண்ணெய் கடனுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்து தீர்வு காணும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன், இம்மாதிரியான பிரச்சினைகளை எதிர்நோக்கும் சில நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாகவும் அமைந்துள்ளது. எதிர்காலத்திலும் இலங்கையும் ஈரானும் இந்த அடிப்படையிலான பண்ட மாற்று முறையை தொடர்வார்களா என்ற விபரம் இன்னமும் தெரிய வரவில்லை.

---

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

உலகளவில் மக்களிடையே வருமானத்திலும், சொத்துக்கள் சேர்ப்பதிலும் பெரும் சமத்துவமின்மை காணப்படுகிறது.

பாலின ஏற்றத்தாழ்வுகள் இந்தியாவில் மிகவும் அதிகமாக இருந்து வருகிறது. பெண் ஊழியர்களின் வருமானப் பங்கு என்பது 18சவீதமாக இந்தியாவில் இருக்கிறது. ஆனால் சீனா தவிர்த்து ஆசியாவில் இது மிகக் குறைவாகும். உலகளவில் இந்த சதவீதம் மிகக்குறைவு. மத்திய கிழக்கு நாடுகளில் பெண் தொழிலாளர்கள் வருமானப் பகிர்வு 15 சதவீதமாக இருக்கிறது. உலகளவில் அதிகமான வருமானம் உள்ள நாடுகளிலும் பாலின சமத்துவமின்மை இருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவில் இருக்கிறது. ஆனால், சமத்துவம் இருக்கும் நாடுகளில் ஒன்றாக சுவீடன் இருக்கிறது.

குறைந்தவருமானம், நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் சமத்துவமின்மை அதிகமாக இருக்கிறது. குறிப்பாக பிரேசில், இந்தியாவில் வருமானச் சமத்துவமின்மை அதிகரித்துள்ளது. அதிகமான அளவில் சீனாவும், குறைந்த அளவில் சமத்துவமின்மை இருக்கும் நாடுகளில் மலேசியாவும் உருகுவேயும் இருக்கின்றன.

கொரோனா வைரஸால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சிக்கல்கள், நெருக்கடிகள் சமத்துவமின்மை அளவை மேலும் அதிகரித்துவிட்டன. குறிப்பாக செல்வந்தர்களுக்கும், சாமானியர்களுக்கும் இடையிலான வேறுபாடு அதிகரித்துள்ளதாக லூகாஸ் சான்சல் (Lucas Chancel) தயாரித்த அந்த ஆய்வறிக்கை கூறுகின்றது.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

கொவிட் தொற்றுக் காரணமாக பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்க சின்னஞ்சிறிய இலங்கை மட்டும் எவ்வாறு தாக்குப் பிடிப்பது என்ற கேள்வி.

இவர்கள் சொல்லும் இந்தக் காரணங்கள் அல்லது நியாயங்களிலும் கூட ஓரளவு உண்மை உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், கொவிட் தொற்றைத் தவிர மற்றைய காரணிகள் அல்லது நிலைமைகள் உருவாகலாம் என்பதைத் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் ஏன் முன்கூட்டியே கணிக்கத் தவறிவிட்டன? அப்படிக் கணித்திருந்தால் முன்கூட்டியே சில தற்பாதுகாப்பு எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்கலாமே?

இது சம்பந்தமாக எமது நாட்டுக்கு ஏற்கெனவே ஒரு அனுபவம் கூட உண்டு. 1970 – 77 காலகட்டத்தில் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான 'மக்கள் முன்னணி' அரசாங்கம் பதவியில் இருந்தபோதும் இந்த மாதிரியான ஒரு நிலைமை ஏற்பட்டது. உலகச் சந்தையில் திடீரென எண்ணெய் விலை பல மடங்காக அதிகரித்ததினாலும், பொருளாதார மந்த நிலையாலும் பல உலக நாடுகளில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. நமது இலங்கையிலும் அது ஏற்பட்டது. மக்கள் ஒரு துண்டு பாணுக்காக இரவிரவாக பேக்கரிகளின் முன்னால் தவம் கிடந்தனர். அரிசிச் சோறு முயற் கொம்பாகியது. உணவகங்களில் சோற்றுக்குப் பதிலாக மரவள்ளி, வற்றாளைக் கிழங்குகள் அவித்துப் பரிமாறப்பட்டன. சீனித் தட்டுப்பாடு ஏற்பட்டதால் கேநீர்க்கடைகளில் சீனி போடாத 'காட்டை' என்ற வெறும் தேநீர் பரிமாறப்பட்டது.

ஆனால் அன்றைய காலகட்டத்தில்பொருளாதார விற்பன்னர்களான பல இடதுசாரிகள் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் இருந்ததால் (அன்றைய அரசாங்கத்தில் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அங்கம் வகித்ததுடன், பொருளாதாரத்தில் இரட்டைக் கலாநிதியான டாக்டர் என்.எம்.பெரேரா நிதியமைச்சராகவும் பதவி வகித்தார்) அவர்கள் உணவில் தன்னிறைவு காண்பதற்கான தேசிய ரீதியிலான இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். அந்த முயற்சி வெற்றியை நோக்கிச் சென்று நாடு உணவில் தன்னிறைவு அடையும் சூழலில் அரசாங்கத்தில் இருந்த வலதுசாரிப் பிரிவினர் அதைத் தடுத்து நிறுத்திக் குழப்பி விட்டனர். அதனால் இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் அரசாங்கத்தை விட்டு வெளியேற நேர்ந்து, 1977 பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் இரு வேறு அணிகளாகப் போட்டியிட்டு, ஐ.தே.கவுக்கு வெற்றி வாய்ப்பைக் கொடுத்துத் தாமும் படுதோல்வி அடைந்தனர். இது என்றென்றும் மறக்கப்பட முடியாத ஒரு வரலாற்றுப் பாடம்.

அன்று அந்த உணவில் தன்னிறைவு காணும் இயக்கத்தை தொடர்ந்திருந்தால், தொடர்ந்தும் நாம் டொலரில் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் தேவையே ஏற்பட்டிருக்காது. அது போல, தேசியக் கைத்தொழில் துறைகளும் கட்டியெழுப்பப்பட்டிருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். அதை விடுத்து 'வெள்ளம் தலைக்கு மேலே போன பின்னர்' வீட்டுத் தோட்டம் செய்யச் சொன்னால் பலன் கிடைக்குமா? அது போல, மாற்று ஏற்பாடுகள் எதுவுமின்றி, இரசாயன உரங்களுக்குப் பழக்கப்பட்டுப்போன விவசாயிகளைப் பார்த்து இரசாயன உரத்தைக் கைவிட்டுவிட்டு இயற்கை உரத்தில் விவசாயத்தைச் செய்யுங்கள் என்றால், பயிர்கள் எழுந்து நிற்குமா அல்லது விவசாயிதான் எழுந்து நிற்பானா?

அது ஒரு புறமிருக்க, 1977 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கம் நாட்டின் விவசாயம் உட்பட தேசிய பொருளாதாரத்தை அழித்து அறிமுகப்படுத்திய 'திறந்த பொருளாதாரக் கொள்கை' என்ற பெயரில் அறிமுகப்படுத்திய அந்த நாசகார நவ தாராளவாதக் கொள்கையைத்தானே தற்போதைய அரசாங்கம் உட்பட கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த எல்லா அரசாங்கங்களும் அட்சரப் பிசகின்றிப் பின்பற்றி வந்திருக்கின்றன. அந்தக் கொள்கையை அடிப்படையில் மாற்றாமல் புண்ணுக்குப் பவுடர் போட்டு மறைப்பது போல சில வெளிப்பூச்சு நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பொருளாதாரம் நிமிர்ந்து

சுய சார்பு ஏற்பட்டுவிடாது.

அன்று எமது நாட்டைக் கைப்பற்றிய ஆங்கிலேய காலனித்துவவாதிகள் எமது நாட்டில் நிலவி வந்த சுய சார்புப் பொருளாதாரத்தை அழித்து தமது இலாபத்துக்காக நமது மலைப் பகுதிகளில் தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற பணப் பயிர்களை உற்பத்தி செய்தனர். அந்தப் பயிர்கள் மூலம் பெற்ற அந்நியச் செலாவணியே அன்றைய நிலையில் நாட்டின் பிரதான வருவாயாக இருந்தது. நாடு 1948 இல் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னரும் கூட சுதந்திர நாட்டின் அரசுகள் அதை மாற்றியமைக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அது போதாதென்று, 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆரின் அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதோடு, அந்நிய முதலீடுகளைக் கொண்டு சுதந்திர வர்த்தக வலயம் என்ற பெயரில் ஆடைத் தொழிற்சாலைகளையும் அறிமுகம் செய்தது. ஜே.ஆர். அரசின் இந்த முயற்சிகள் மேலும் மேலும் அந்திய சக்திகளின் தயவில் நமது நாடு தங்கி நிற்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

அது மாத்திரமின்றி, ஜே.ஆர். காலத்தில் அறிமுகமான மத்திய கிழக்கு வேலை வாய்ப்பும், சுற்றுலாத்துறை ஊக்குவிப்பும் கூட நமது நாட்டை அந்நிய சக்திகளின் தயவில் தங்கி நிற்பதை மேலும் அதிகரித்தது. இருந்தும் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் எவையுமே இந்த நிலைமையை மாற்றி அமைத்து, குறைந்த பட்சம் ஒரு சுய சார்பு விவசாயப் பொருளாதாரத்தைத் தன்னும் கட்டியெழுப்ப முயற்சிக்கவில்லை. அதன் காரணமாக, தற்பொழுது கொவிட் பெருந்தொற்று ஏற்பட்டு அந்நிய சக்திகள் மூலம் பெற்ற வருவாய் ஊற்று நின்று போனதும் நாடு அதலபாதாளத்தில் விழுந்துள்ளது.

இந்த உண்மையை இப்பொழுதாவது ஏற்றுக் கொண்டு, நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை மறு சீரமைப்பதற்குப் பதிலாக, இரண்டு பிரதான ஆளும் கட்சிகளும் ஒருவர் மாறி ஒருவர் ஆளையாள் குற்றம் சாட்டுவதால் பிரச்சினை தீரப் போவதில்லை. நாட்டுக்கு இழைத்த குற்றங்களைப் பொறுத்தவரை இரண்டு பிரதான கட்சிகளும் மிகப்பெரும் கிறிமினல் குற்றவாளிகளே.

இந்த நிலையில் இலங்கை மக்கள் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் தமக்கான ஒரு சரியான தலைமையை ஏற்படுத்தி நாட்டையும் மக்களையும் நேசித்து, சரியான பாதையில் செயற்படும் ஒரு அரசாங்கத்தை உருவாக்கினால் தவிர, இந்தப் பிரச்சினை ஒருபோதும் தீரப் போவதில்லை.

# பெருந்தொற்று உலகின் இரண்டு ஆட்சி முறைமைகளை எடுத்துக் காட்டுகிறது!

உலகம் சர்வதேச ரீதியாக பெருந்தொற்றின் இரண்டாவது ஆண்டை 2021 சடிம்பர் 27 இல் நினைவு கூர்ந்து நிற்கும் இவ்வேளையில், உலகின் பெரும் பணக்கார மற்றும் பலம் பொருந்திய நாடுகள் பெருந்தொற்றின் முன்னால் தயாரற்ற நிலையில் இருப்பதைக் காண முடிகிறது. வேகமாகப் பரவி வருகின்ற ஒமிக்குரோன் (Omicron) காரணமாக விமானப் பணியாட்களுக்கு இந்த நோய்த் தொற்று ஏற்பட்டதின் காரணமாக பல விமான சேவைகள், குறிப்பாக அமெரிக்காவினுடையது, தமது பயணங்களை தாமதிக்க வேண்டி அல்லது இரத்துச் செய்ய வேண்டி வந்துள்ளது.

இந்த வைரசுக்கு எதிராக பணக்கார நாடுகள் ஏன் மோசமான முறையில் செயல்பட்டன? அவர்களிடம் இரண்டாவது மூன்றாவது தடுப்பூசியை ஏற்றக்கூடிய அளவுக்கு போதிய கையிருப்பு இருந்தது. அமெரிக்கா சீனாவுடன் ஒரு புதிய பனிப்போரைத் தொடங்கி, உலகைப் பிளவுபடுத்தி, பெருந்தொற்றுக்கு எதிரான கூட்டுச் செயற்பாடுகளில் பங்குபற்ற மறுத்த சூழலிலும் சீனா ஆபிரிக்காவுக்கு 600 மில்லியன் தடுப்பூசிகளை வழங்கி உள்ளது

உண்மை என்னவென்றால், இந்தப் பெருந்தொற்று உலகின் இரண்டு விதமான ஆட்சி முறைகளை எடுத்துக் காட்டுகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்றன நவ தாராளவாதக் கொள்கைகளாலும், நிதி வளங்களாலும் பணக்கார நாடுகளாக உள்ள போதிலும், அவற்றை விட சீனாவால் தலைமை தாங்கப்படும் சோசலிச நாடுகள் வெகுதூரம் சிறப்பானவையாக செயற்பட்டுள்ளன.

எமது உலகில் பரவலாக நம்பிக்கை வைக்கப்படும் IDEP என்ற புள்ளிவிபர இணையத்தள தகவலின்படி, இந்தப் பெருந்தொற்றால் இறந்தவர்கள் வீதம் அமெரிக்காவில் ஒரு மில்லியனுக்கு 2,450.20 ஆகவும், பிரித்தானியாவில் ஒரு மில்லியனுக்கு 2,171.55 ஆகவும் இருக்கின்றது. மறுபக்கத்தில் சோசலிச



*ராதிகா தேசாய்* **(Radhika Desai)**

நாடுகளான சீனாவில் இது ஒரு மில்லியனுக்கு 3.21 ஆகவும், வியட்நாமில் 320.04 ஆகவும், கியூபாவில் (அமெரிக்காவின் 60 ஆண்டு கால பொருளாதாரத் தடைகள் மத்தியிலும்) 735.23 ஆகவும் இருக்கின்றது.

தெளிவான உண்மை என்னவெனில், இந்த செல்வந்த நாடுகள் வைரசுக்கு எதிராகப் போராடுவதை விட வேறு மூன்று விடயங்களுக்கே முன்னுரிமை கொடுக்கின்றன. முதலாவது, இந்த நாடுகள் பின்பற்றும் நவ தாராளவாதக் கொள்கைகள் காரணமாக அவர்களுக்கு இந்த தொற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளோ நோக்கமோ எதுவும் கிடையாது. சுகாதார பராமரிப்பு முறைமையூடாக தமது பிரசைகளைப் பாதுகாப்பதை விடுத்து, சுகாதார பராமரிப்பு முறையைப் பாதுகாக்கும்படி பொதுமக்கள் கேட்கப்படுகிறார்கள்.

இரண்டாவதாக, அவர்கள் உயிர்களைப் பாதுகாப்பதையும், உயிர் வாழ்வதற்குரிய வளங்களைப் பாதுகாப்பதையும் சமாந்தரமாக வைத்துக் கொண்டு, இலட்சாதிபதிகளையும் முதலாளிகளையும் பாதுகாக்க முற்படுவதால், உழைக்கும் மக்கள் இந்தத் தொற்றுக்கு உள்ளாகி நோய்வாய்ப்படுவதுடன், இறந்தும் வருகிறார்கள். அவர்களது பிந்தைய சுலோகம் என்னவென்றால், "மக்கள் இந்த வைரசுடன் எப்படி வாழ்வதென்பதை கற்றுக்கொள்ள வேண்டும்" என்பதாகும். இதன் அர்த்தம் மேட்டுக் குடியினர் வீடுகளில் பாதுகாப்பாகவும், தூய்மையான சுற்றுச்சூழலிலும் வாழ, "அத்தியாவசிய தொழிலாளர்"களான பெண்களும், வெள்ளையரல்லாதோரும் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாக வேண்டும் என்பதே.

இறுதியாக, இந்த நோயை வைத்து பெரும் மருந்து நிறுவனங்கள் பெரும் இலாபம் ஈட்ட வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாகும்.

மேற்கத்தைய நாடுகளைப் பொறுத்தவரை, சீனாவுடன் புதிய பனிப்போர் ஒன்றை ஆரம்பித்துள்ளதால் இந்த விடயத்தில் அவர்களால் சீனாவிடமிருந்து கற்றுக் கொள்வது சாத்தியமில்லை. சீனாவின் அனுபவம், வெற்றி என்பனவற்றைக் கற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவர்கள், சீனாவின் "எதேச்சாதிகாரம்", "ஆகக் கூடுதலான அடக்குமுறை" என்பன பற்றியே கதைக்கின்றனர்.

"இந்த வைரசைக் கட்டுப்படுத்துவதில் சீனாவின் முயற்சிகள் அதைக் கட்டுப்படுத்துவதை விட செலவு மிக்கதாகும்" என 'த எக்கோனமிஸ்ட்' (The Economist) கூறுகிறது. அதேபோல, "இந்தப் பெருந்தொற்றை கட்டுப்படுத்தும் சீனாவின் முயற்சிகள் பெரும் பொருளாதாரப் பின்னடைவைக் கொண்டு வந்துள்ளது" என 'பினான்சியல் ரைம்ஸ்' (The Finanacial Times) முறையிடுகிறது. இத்தகைய கருத்துக்கள் சீனா தனது மக்களின் உயிர்களையும், வாழ்க்கைத் தேவைகளையும் மேற்குலகை விட சிறந்த முறையில் பாதுகாத்ததை முற்றுமுழுதாக நிராகரிப்பதாகும். தடுப்பூசிகள் என்பவை வைரசுக்கு எதிரான வெள்ளித் தோட்டாக்கள் அல்ல. அவை நோய் வேகமாகப் பரவுவதைத் தடுப்பவை மட்டுமே.

(ராதிகா தேசாயால் எழுதப்பெற்று China Global Television Network இல் வெளிவந்த ஒரு கட்டுரையின் சாராம்சமே மேலே சுருக்கித் தரப்பட்டுள்ளது)